

# திருக்குர்ஆன் நற்செய்தி மலர்

-சமூக சீர்திருத்த மாத இதழ்-

THIRU QURAN NARCHEYDHI MALAR - 2018 JULY

மலர்: 11 இதழ்: 10 ஜூலை 2018 விலை: ரூ. 10

## மனமாற்றமும் குணமாற்றமுமே இஸ்லாம்

- முஹம்மது(ஸல்) அவர்கள் இறைத்தூதரான வேளை..
- இஸ்லாத்தைத் திணிக்க முடியுமா?
- கற்களையும் கரைத்திடுமே மன்னிப்பு!
- போரின்போதும் வழுவாத மனிதநேயம்
- வெற்றியின்போதும் வழுவாத மனிதநேயம்
- கோபத்தை மென்று விழுங்குதல்

# திணிப்பதற்கு வழியேதும் இல்லை!

நபிகள் நாயகம்(ஸல்) தமது 63 ஆம் வயதில் மதீனாவில் மரணிக்கும் போது இன்றைய இந்தியாவை விட அதிக நிலப்பரப்பு அவரது ஆளுகையின் கீழ்வந்திருந்தது . சக்தி வாய்ந்த அரசியல் தலைமையும் ஆன்மீகத் தலைமையும் ஒருசேரப் பெற்றிருந்தாலும் மக்களின் மீது இஸ்லாத்தைத் திணிக்கவில்லை. இறைவனின் கட்டளை இது:



● இம்மார்க்கத்தில் எந்த வற்புறுத்தலும் இல்லை. வழி கேட்டிலிருந்து நேர்வழி தெளிவாகி விட்டது. தீய சக்திகளை மறுத்து அல்லாஹ்வை நம்புபவர் அறுந்து போகாத பலமான கயிற்றைப் பிடித்துக் கொண்டார். அல்லாஹ் செவியுறுபவன் அறிந்தவன். (திருக்குர்ஆன் 2:256)

இந்த இறைக்கட்டளைப்படி இம்மார்க்கத்தை ஏற்றுக் கொள்வதும் மறுப்பதும் தனிநபர் சுதந்திரத்தில் உள்ள உரிமை என்ற அடிப்படையில் நபிகளாரின் ஆளுகையின் கீழ் எவரையும் இம்மார்க்கத்தை ஏற்றுக் கொள்ளுமாறு கட்டாயப் படுத்தவில்லை. யூதர்களும் கிறிஸ்தவர்களும் அவரவர் மதங்களை பின்பற்றி வாழ்ந்தனர்.

மாற்றுமத மக்களோடு நபிகளார் எப்படி நடந்துகொண்டார்கள் என்பதை அறிய பின்வரும் சம்பவத்தை சற்று பாருங்கள்:

யூதப் பெண்ணொருத்தி நபிகள் நாயகம்(ஸல்) அவர்களுக்கு நஞ்சூட்டப்பட்ட ஆட்டைக் கொண்டு வந்து கொடுத்தார். அதை நபி(ஸல்) அவர்கள் சாப்பிட்டார்கள். அவள் நபி(ஸல்) அவர்களிடம் அழைத்து வரப்பட்டு அவளிடம் இதுபற்றி விசாரித்தார்கள். “உங்களைக் கொல்லும் நோக்கத்தில் அவ்வாறு செய்தேன்“ என்று அவள் கூறினாள். அல்லாஹ் உனக்கு அந்தப் பொறுப்பைத் தரவில்லை என்று நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள். “இவளைக் கொன்று விடட்டுமா? என நபித்தோழர்கள் கேட்டதற்கு “கூடாது“ என நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள். (முஸ்லிம், அஹ்மத் ஆகிய நூல்களிலும் இந்த வரலாற்று நிகழ்ச்சி பதிவு செய்யப்பட்டுள்ளது)

இன்னும் தனக்கு எதிராக யார் எந்தக் குற்றங்களைச் செய்த போதும் மன்னித்தே வந்திருக்கிறார்கள் ஆனால் மார்க்கத்திற்கு எதிராக - அதாவது மக்கள் நலனுக்கு எதிராக - யாரேனும் குற்றம் புரிந்தால் அதை தண்டிக்காமல் விட்டதில்லை என்று அவரது உற்ற தோழர்கள் அறிவிப்பது ஹதீஸ் நூல்களில் பதிவாகி உள்ளது.



அளவற்ற அருளாளனும் நிகரற்ற அன்புடையோனுமாகிய

அல்லாஹ்வின் திருப்பெயரால்...

# திருக்குர்ஆன் நற்செய்தி மலர்

# THIRU QURAN NARCHEYDHI MALAR

மலர்: 11 இதழ்: 10 ஜூலை 2018 விலை: ரூ. 10

## பொருளடக்கம்

முஹம்மது(ஸல்) அவர்கள் இறைத்தூதரான வேளை.. 2
மனமாற்றமும் குணமாற்றமுமே இஸ்லாம் -4
இஸ்லாத்தை கட்டாயமாக திணிக்க முடியுமா? -5
கற்களையும் கரைத்திடுமே மன்னிப்பு! -7
வாசகர் எண்ணம் -11
புதுமனிதனாக மாவீரன் துமாமா! -12
போரின்போதும் வழுவாத மனிதநேயம் -15
ஏழை எளியோர் நலன் காக்காத அரசுக்கு நாசமே! -16
வெற்றியின்போதும் வழுவாத மனிதநேயம் -17
வீடுவரை ரகு (தொடர்ச்சி) --19
இறை நினைவோடு உறங்கு! -21
கோபத்தை மென்று விழுங்குதல் -22
அதிகாலைத் தொழுகையின் சிறப்புக்கள் -24

**வாசகர்கள் கவனத்திற்கு...**

- இவ்விதழைப் பெறவிரும்பும் அன்பர்கள் தங்களது தெளிவான விலாசத்தை **9886001357** என்ற எண்ணுக்கு **SMS** அனுப்பவேண்டும்.
- மாற்று மத அன்பர்களுக்கு இவ்விதழ் ஒரு வருடம் வரை அன்பளிப்பாக அனுப்பி வைக்கப்படும். தொடர்ந்து பெறவிரும்பினால் அவர்கள் **SMS** மூலம் **RESEND QNM** என்று டைப் செய்து அனுப்பவேண்டும். சந்தா அனுப்பத் தேவையில்லை.
- முஸ்லிம் அன்பர்களுக்கு 4 மாதம் வரை இவ்விதழ் இலவசமாக அனுப்பிவைக்கப்படும். தொடர்ந்து பெறவிரும்புவோர் சந்தா அனுப்ப வேண்டும்.
- ஓராண்டு சந்தா **Rs.120-**
- இதழ் மொத்தமாக வேண்டுவோர், சந்தாதாரர்கள் குறைபாடுகள் தொடர்பு எண்: **08867971835**

Published from:

**House of Peace,**

PO Box no. 1726, No.501, 3rd cross, Syed Block,
AS palya Bangalore 560017

**Ph. 9886001357 email: amkasim@yahoo.com**

**www.quranmalar.blogspot.com**

# முஹம்மது(ஸல்) அவர்கள் இறைத்தூதரான வேளை..

சவுதி அராபியாவில் மக்கா நகரில் பிறந்து வளர்ந்த முஹம்மது நபி (ஸல்) அவர்கள் தமது நாற்பது வயது வரை சாதாரண மனிதராகவும், ஒருவியாபாரியாகவும் தான் இருந்தார்கள்.

ஆனால் தாம் வாழ்ந்த மக்களிடையே உண்மைக்கும் நேர்மைக்கும் நாணயத்திற்கும் பெயர்பெற்றவர்களாக இருந்தார்கள். மக்கள் அவரை 'அல் அமீன்' (நம்பிக்கைக்கு உரியவர்)) என்ற பட்டப்பெயர் கொண்டு மதிப்போடு அழைத்தார்கள்.

ஆனால் அவரைச் சுற்றி வாழ்ந்த மக்கள் பலவிதமான மூடநம்பிக்கைகளிலும் மூடப்பழக்கவழக்கங்களிலும் மூழ்கிக்கிடந்தார்கள்.

- அதிகாரம் படைத்தவர்களும் பலம் வாய்ந்தவர்களும் இடைத்தரகர்களும் சேர்ந்து கடவுளின் பெயரால் மக்களை அடிமைப் படுத்தியும் கொடுமைப் படுத்தியும் வந்தனர்.
- குலவேற்றுமையும் இனவேற்றுமையும் ஆழமாய் வேரூன்றியிருந்த காரணத்தால் அவர்களுக்குள்ளே சண்டைகளுக்கும் கலகங்களுக்கும் பஞ்சமில்லாமல் இருந்தது.
- பெண்ணடிமைத்தனமும் மூடநம்பிக்கைகளும் காரணமாக அவர்கள் பெண்குழந்தைகள் பிறந்தாலே இழிவு என்று கருதி அவர்களை உயிரோடு புதைக்கவும் செய்து வந்தார்கள்.
- இன்னும் இவைபோன்ற பல மனிதஉரிமை மீறல்களும் அனாச்சாரங்களும் தலைவிரித்தாடிக் கொண்டிருந்தன.

தன்னைச் சுற்றி இவையெல்லாம் நடந்துகொண்டிருக்க இவற்றுக்கான தீர்வுகளுக்காக அவரது மனம் ஏங்கிக் கொண்டிருந்த வேளையில்தான் முஹம்மது (ஸல்) அவர்கள் இறைவனின் தூதராகத் தேர்ந்தெடுக்கப் படுகிறார்கள். ஜிப்ரீல் என்ற வானவர் மூலம் நபிகளாருக்கு இறைவன் புறத்திலிருந்து வேதவசனங்களும் இறைகட்டளைகளும் வழிகாட்டுதல்களும் வரத் துவங்கின.

**சத்தியப் பிரச்சாரத்தின் துவக்கம்**

நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் தமது நாற்பதாம் வயதில் தம்மை இறைவனின் தூதர் என்று மக்களிடையே பிரகடனம் செய்து இறைவன் புறத்திலிருந்து தான் பெறும் செய்திகளையும் எச்சரிக்கைகளையும் மக்களுக்கு எடுத்துச் சொன்னார்கள்.

- இந்த உலகம் இறைவனால் படைக்கப் பட்டது. இங்கு வாழும் மனிதர்கள் யாவரும் இறைவனுக்கு கீழ்படிந்து வாழக் கடமைப் பட்டுள்ளார்கள். அவ்வாறு வாழ்ந்தால் மட்டுமே இவ்வுலகில் நீதியும் அமைதியும் ஏற்படும். மறுமையிலும் நீங்கள் மோட்சத்தை அடைய முடியும்.
- ஒருநாள் இவ்வுலகம் முற்றாக அழிக்கப்படும். மீண்டும் இறைவனிடமிருந்து கட்டளை பிறப்பிக்கப் படும்போது இவ்வுலகின் மீது வாழ்ந்து மறைந்த அனைத்து மனிதர்களும் மீண்டும் உயிர்கொடுத்து எழுப்பப்படுவர். அன்று ஒவ்வொரு மனிதர்களும் இப்பூமியின் மேல் செய்த ஒவ்வொரு பாவமும் புண்ணியமும் எடுத்துக்காட்டப்பட்டு. விசாரிக்கப்

படுவார்கள். விசாரணைக்குப் பிறகு புண்ணியவான்களுக்கு சொர்க்கமும் பாவிகளுக்கு நரகமும் விதிக்கப் படும். எனவே இறைவனின் கட்டளைகளை ஏற்று அவன் ஏவியவற்றைச் செய்யுங்கள். தடுத்தவற்றில் இருந்து விலகிக் கொள்ளுங்கள்.

● இறைவனின் கட்டளைகளில் முக்கியமானது அந்த ஏக இறைவன் மட்டுமே வணங்குவதற்குத் தகுதியானவன் என்று ஏற்றுக் கொள்வதாகும். அவனை இடைத்தரகர்கள் இன்றி நேரடியாக வணங்க வேண்டும். அவன் அல்லாத எதையுமே கடவுள் என்று சொல்வதோ வணங்குவதோ அறவே கூடாது. அவனுக்கு பதிலாக சிலைகளையோ உருவங்களையோ வணங்குதல் பெரும் பாவமாகும்.

● மனிதர்கள் அனைவரும் சீப்பின் பற்களைப் போல் சமமானவர்களே. இனத்தாலோ, குலத்தாலோ, நிறத்தாலோ, மொழியாலோ யாரும் யாரையும் விட உயர்ந்தவர்கள் அல்ல.

● மேலும் கொலை, கொள்ளை, வட்டி, சிசுக்கொலைகள், சூதாட்டம், விபச்சாரம், போதைப் பொருட்கள், பொய், பித்தலாட்டம், மோசடி, ஏமாற்றுதல், போன்ற தீமைகள் இறைவனிடம் பாவங்களாக பதிவு செய்யப்படுகின்றன. இவற்றுக்கான விசாரணையும் தண்டனைகளும் இறைவனிடம் உண்டு. எனவே மனிதர்கள் இவற்றில் விலகி இருக்க வேண்டும்“

இன்னும் இவைபோன்று தான் இறைவனிடமிருந்து பெறும் செய்திகளை மக்கள் முன் எடுத்துரைத்து சத்தியப் பிரச்சாரத்தை துவங்கினார் நபிகள் நாயகம் (ஸல்).

## ஏற்றோரும் மறுத்தோரும்

ஆம், நபிகள் நாயகம் இந்த ஏக இறைக்கொள்கையைச் சொல்லச் சொல்ல ஆரம்பத்தில் ஒருசில பலவீனமானவர்களும் ஒடுக்கப்பட்ட வர்களும்தான் இக்கொள்கையை ஏற்றுக் கொண்டார்கள். நாளடைவில் மற்றவர்களையும் கவர ஆரம்பித்தது. ஆனால் மூதாதையர்கள் வளர்த்த மூடப் பழக்கவழக்கங்களில் மூழ்கிப் போயிருந்த பெரும்பான்மை மக்களோ இக்கொள்கைக்கு எதிரிகளாக மாறினார்கள். இறைவனை நேரடியாக வணங்க முடியும் என்பதாலும் சக மனிதன் சமமே சகோதரனே என்பதாலும் இடைத்தரகர்களும் ஆதிக்க சக்தியினரும் சேர்ந்து இக்கொள்கை பரவாமல் தடுக்க முழுமூச்சோடு உழைத்தார்கள்.

அன்றுவரை நபிகள் நாயகம் (ஸல்) அவர்களை உண்மையாளர், நம்பிக்கைக்கு உரியவர் (அல் அமீன்) என்றெல்லாம் பாராட்டிய மக்கள் அவருக்குப் பைத்தியம் என்று பட்டம் சூட்டினார்கள் அவர்களையும், அவர்களது கொள்கையை ஏற்றுக் கொண்டவர்களையும் சொல்லொனாத துன்புறுத்தல்களுக்கும் சித்திரவதைகளுக்கும் ஆளாக்கினார்கள்.

● **“அவர்கள் சகித்துக் கொண்டதாலும், நன்மையின் மூலம் தீமையைத் தடுத்ததாலும், அவர்களுக்கு நாம் வழங்கியதை (நல்வழியில்) செலவிட்டதாலும் அவர்களுக்கு இரண்டு தடவை அவர்களின் கூலிகள் வழங்கப்படும்.” (திருக்குர்ஆன் 28 :54)**

# மனமாற்றமும் குணமாற்றமுமே இஸ்லாம்

மக்களுக்கும் நாட்டுக்கும் நன்மைபயக்கக் கூடிய இஸ்லாம் என்ற ஒரு அழகிய சீர்திருத்தக் கொள்கையை முன்வைத்து அதன்பால்தான் அழைத்ததற்காக நபிகளார் மீதும் இஸ்லாத்தை ஏற்றுக்கொண்டோர் மீதும் பயங்கரவாத அடக்குமுறைகள் கட்டவிழ்த்துவிடப்பட்டன.

● நபிகளார் பிரச்சாரம் செய்யும்போது அவரது முகத்தில் மண்ணைத் தூவினார்கள். ‘பைத்தியக்காரர்’ ‘சூனியக்காரர்” என வசை பாடினார்கள்.

● கஅபா ஆலயத்தின் அருகே அவர் தன் நெற்றியை தரையில் வைத்துத் தொழுது கொண்டு இருக்கும்போது அவரது தலைமீது அறுக்கப்பட்ட ஒட்டகத்தின் சாணத்தையும் இரத்தத்தையும் கழிவுப் பொருட்களையும் கொண்டுவந்து கொட்டி அவர் தம் தலையைத் தூக்க இயலாமல் தத்தளிப்பது கண்டு எள்ளி நகையாடினார்கள்.

● அவர் நடக்கும் பாதையில் முட்களைப் பரப்பிவைத்தார்கள். வீட்டிற்கு முன் கழிவுப் பொருட்களையும் குப்பைகளையும் கொட்டி வைத்தார்கள்.

● தாயி.்.ப் என்ற இடத்தில் அவர் பிரச்சாரம் செய்யும் வேளை சிறுவர்களை ஏவிவிட்டு இரத்தம் சிந்த கல்லால் அடித்தார்கள்.

● இக்கொள்கையை ஏற்றுக் கொண்ட நலிந்தோர்களையும் அடிமைகளையும் கொன்று குவித்தார்கள். மூதாதையர்களின் மதங்களையும் கடவுளர்களையும் மதிக்காதவர்களுக்கு இதுதான் கதி என்று மக்களை அச்சுறுத்தினார்கள்.

● ஏக இறைவன் மட்டுமே வணக்கத்திற்கு உரியவன். அவனைத் தவிர எதுவும் வணக்கத்திற்கு உரியவை அல்ல என்று கூறியமைக்காக பகல் முழுக்க பாலைவனத்து சுடமணலில் கிடத்தி வெற்றுமேனியில் பாறாங்கற்களை ஏற்றினார்கள்.

● தண்ணீர் தொட்டிமுன் முழங்காலிட வைத்து தலையை நீரில் அழுத்தி மூச்சு முட்ட வைத்து சிலைவழிபாட்டுக்குத் திரும்புமாறு பணித்தார்கள்.

● பழுக்கக் காய்ச்சிய இரும்புக் கம்பிகளால் உடலில் சூடிட்டு தாய்மதம் திரும்ப வற்புறுத்தினார்கள்.

● இன்னும் இவைபோன்ற பல்வேறுவகையான சித்திரவதைகளும் ஊரெங்கும் அரங்கேறிக் கொண்டு இருந்தன.

## மனமாற்றமும் குணமாற்றமுமே இலக்கு

ஆயினும் தன்னை மக்கள் தாக்கியபோதும் நபிகளார் பொறுமையுடன் தாங்கிக் கொண்டார்கள். தன் சகாக்கள் தாக்கப் பட்டபோதும் பொறுமையை மேற்கொள்ளுமாறு பணித்தார்கள். ஏனெனில் இங்கு தாக்குபவர்கள் நமக்கு எதிரிகளே அல்ல. அவர்களைப் பீடித்துள்ள ஷைத்தான்தான் நமக்கு எதிரி. பொறுமை மூலமும் விவேகத்தைக் கைக்கொள்வது மூலமும்தான் இம்மக்களைத் திருத்தியெடுத்து நேர்வழிக்குக் கொண்டுவர முடியும் என்பதை நன்றாக உணர்ந்திருந்தார்கள் அண்ணல் நபிகளார்.

● **“நன்மையும், தீமையும் சமமாகாது. நல்லதைக் கொண்டே (பகைமையை) தடுப்பீராக! எவருக்கும் உமக்கும் பகை இருக்கிறதோ அவர் அப்போதே உற்ற நண்பராகி விடுவார். (திருக்குர்ஆன் 41 : 34)**

**மனமாற்றமும் குணமாற்றமுமே இஸ்லாம்**

# இஸ்லாத்தை கட்டாயமாக திணிக்க முடியுமா?

**1.இஸ்லாம் என்பது ஒரு கொள்கை:** இவ்வுலகைப் படைத்து பரிபாலித்து வரும் இறைவனுக்கு கீழ்படிந்து வாழ்தலே இஸ்லாம் என்ற அரபுமொழி சொல்லால் அறியப்படுகிறது. இனம், நாடு, மொழி, நிறம் இவற்றின் வரம்புகளைக் கடந்து இதை யார் வேண்டுமானாலும் ஏற்றுக்கொள்ளலாம். அதன் படி தன்னை சீர்திருத்திக் கொண்டு வாழலாம். அவ்வாறு மனிதன் தன்னை இறைவனின் கட்டளைகளுக்கு கட்டுப்படுத்திக் கொண்டு வாழ்ந்தால் இவ்வுலகிலும் அமைதி காணமுடியும் என்பதும் மறுமையில் அதற்குப் பரிசாக சொர்க்கம் என்ற நிரந்தர வாழ்விடம் கிடைக்கும் என்பதும் இஸ்லாம் முன்வைக்கும் தத்துவமாகும். நம்பிக்கை சார்ந்த விடயம் என்பதால் எப்படி நாத்திகத்தையோ அல்லது ஆத்திகத்தையோ யார்மீதும் திணிக்க முடியாதோ அதேபோல இஸ்லாத்தையும் யார்மீதும் திணிக்க முடியாது.

**2. முஸ்லிம் என்பது பண்பை ஒட்டிய பெயர்- பிறப்பினால் வருவது அல்ல!**

யார் அவ்வாறு இறை கட்டளைகளுக்கு தன்னைக் கட்டுப்படுத்திக் கொண்டு வாழ்கிறாரோ அவரே ‘முஸ்லிம்’ (பொருள்- கட்டுப்பட்டவர்) என்று அறியப்படுகிறார். அவ்வாறு கட்டுப்பட்டு வாழும் வரைதான் அவர் முஸ்லிமாக இருப்பார். எப்போது அதை விட்டுவிட்டாரோ அப்போதே இஸ்லாமிய வட்டத்தில் இருந்து வெளியேறியும் விடுகிறார். உதாரணமாக இஸ்லாமிய கடமைகளில் ஒன்றான தொழுகையை விடுபவர் பற்றி நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்:

- “இறைமறுப்புக்கும் இஸ்லாத்திற்கும் இடையேயுள்ள வித்தியாசம் தொழுகையே. எவன் அதனை விடுகின்றானோ அவன் இறைமறுப்பாளன் ஆகி விடுகிறான்” (ஆதாரம்: இப்னு ஹிப்பான்)

எனவே ஒருவர் சுயவிருப்பத்தின் அடிப்படையில் மட்டுமே முஸ்லிமாக முடியும். யாரும் யாரையும் நிர்பந்தித்து முஸ்லிமாக்க முடியாது என்பது தெளிவு.

**3. சடங்குகள் இல்லை:** ஒருவர் இஸ்லாம் மார்க்கத்தை ஏற்றுக்கொள்ள விரும்பினால் இறைவனிடம் ஒரு உறுதிமொழியை எடுத்துக் கொண்டால் போதுமானது. அதாவது ‘வணக்கத்துக்குரியவன் இறைவனைத் தவிர யாரும் இல்லை என்றும் முஹம்மது நபி அவர்கள் இறைவனின் தூதர் ஆவார் என்றும் ஒப்புக்கொள்கிறேன், அதற்கு சாட்சியம் கூறுகிறேன்” என்று மனதார ஏற்று வாய்மொழியாகக் கூறுவதே அந்த உறுதிமொழி. அதற்கு எந்த சடங்குகளும் கிடையாது. யார் முன்னிலையிலோ அல்லது பள்ளிவாசலிலோ இதை கூறவேண்டும் என்பதும் கிடையாது. இஸ்லாத்தை ஏற்பது என்பது ஏற்பவருக்கும் இறைவனுக்கும் மத்தியிலான ஒரு உடன்படிக்கை. அதை எழுத்துமூலமாக்க வேண்டும் என்பதோ ஏதாவது நீதிமன்றத்திலோ அலுவலகத்திலோ தாக்கல் செய்யவேண்டும் என்பதோ கிடையாது.

**4. இஸ்லாத்தில் கட்டாயம் என்பதும் கிடையாது:** *இஸ்லாத்தின் அடிப்படையான திருக்குர்ஆனில் யாரும் யார் மீதும் மார்க்கத்தை திணிக்கக் கூடாது என்ற கட்டளை தெளிவாக உள்ளது.*

● **இம்மார்க்கத்தில் எந்த வற்புறுத்தலும் இல்லை. வழி கேட்டிலிருந்து நேர்வழி தெளிவாகி விட்டது. தீய சக்திகளை மறுத்து அல்லாஹ்வை நம்புபவர் அறுந்து போகாத பலமான கயிற்றைப் பிடித்துக் கொண்டார். அல்லாஹ் செவியுறுபவன் அறிந்தவன். (அல்குர்ஆன் 2 : 256)**

*(அல்லாஹ் என்றால் வணக்கத்திற்குத் தகுதிவாய்ந்த ஒரே இறைவன் என்று பொருள்)*

● **"இவ்வுண்மை உங்கள் இறைவனிடமிருந்து உள்ளது" என்று (முஹம்மதே) கூறுவீராக! விரும்பியவர் நம்பட்டும்! விரும்பியவர் மறுக்கட்டும். அநீதி இழைத்தோருக்கு நரகத்தை நாம் தயாரித்துள்ளோம். அதன் சுவர்கள் அவர்களைச் சுற்றி வளைத்துக் கொள்ளும். அவர்கள் தண்ணீர் கேட்டால் முகத்தைப் பொசுக்கும் உருக்கிய செம்பு போன்ற கொதி நீர் வழங்கப்படும். அது கெட்ட பானம். கெட்ட தங்குமிடம். (அல்குர்ஆன் 18 : 29)**

● **(முஹம்மதே!) உமது இறைவன் நாடியிருந்தால் பூமியில் உள்ள அனைவரும் ஒட்டு மொத்தமாக நம்பிக்கை கொண்டிருப்பார்கள். நம்பிக்கை கொண்டவர்களாக ஆவதற்காக மக்களை நீர் நிர்பந்திப்பீரா? (அல்குர்ஆன் 10 : 99)**

● **எனவே அறிவுரை கூறுவீராக! (முஹம்மதே!) நீர் அறிவுரை கூறுபவரே. அவர்களுக்கு நீர் பொறுப்பாளி அல்லர். புறக்கணித்து (ஏக இறைவனை) மறுப்பவன் தவிர. அவனை மிகக் கடுமையாக அல்லாஹ் தண்டிப்பான். அவர்களுடைய மீளுதல் நம்மிடமே உள்ளது. பின்னர் அவர்களை விசாரிப்பது நம்மைச் சேர்ந்தது. (அல்குர்ஆன் 88 : 21)**

**இறை எச்சரிக்கைகளும் கட்டாயப்படுத்தல் அல்லவா?**

*ஒருவேளை இங்கு இறைவனின் வசனங்கள் இஸ்லாத்தை ஏற்காதவர்களுக்கு மறுமையில் நேரகூடிய பாதிப்புகளைப் பற்றி எச்சரிப்பதால் இதுவும் ஒரு கட்டாயப் படுத்துதல் அல்லவா? என்ற கேள்வி உங்களுக்குள் எழலாம். இதற்குரிய விளக்கம் இதோ....*

*ஒரு நகரத்தில் போக்குவரத்தை ஒழுங்கு செய்வதற்காக அங்கு காவல் துறையினர் சில சட்டங்களை விதிக்கிறார்கள் என்று வைத்துக் கொள்வோம். உதாரணமாக வாகனங்கள் சாலையின் இடதுபுறமாகச் செல்லவேண்டும் என்பது, சிவப்பு விளக்கு எரியும்போது நிற்றல், பச்சைவிளக்கு எரியும்போது செல்ல அனுமதி போன்றவற்றை கூறலாம். அதேவேளையில் அவற்றை மீறுவோருக்கு தக்க தண்டனைகளையும் அபராதங்களையும் அவர்களே குறிப்பிடுவார்கள். அவை போன்றதே இறைவனின் வசனங்களும்! இவ்வுலகுக்கு சொந்தக்காரன் அவன். இம்மையும் மறுமையும் அவனுக்கே சொந்தம். அந்தவகையில் தான் விதித்த சட்டங்களையும் பரிந்துரைக்கும் வாழ்க்கை நெறியையும் ஏற்காதவர்கள் சந்திக்க இருக்கும் விளைவுகளை நமக்கு முன்கூட்டியே எச்சரிக்கிறான் என்பதைப் புரிந்து கொண்டால் இந்த சந்தேகம் விலகும்.*

● **தானத்தில் சிறந்தது, உங்கள் மீது வன்மம் கொண்டுள்ள உறவினர்க்கு வழங்குவது. - நபிமொழி (நூல் : அஹ்மத்)**

மனமாற்றமும் குணமாற்றமுமே இஸ்லாம்

# கற்களையும் கரைத்திடுமே மன்னிப்பு!

பூமியில் தர்மத்தை நிலைநாட்ட இறைவனால் தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள் இறைத்தூதர்கள். படைத்த இறைவன் வழங்கும் வாழ்க்கை வழிகாட்டுதல்கள் பக்கம் மக்களை அழைப்பது, முன்மாதிரி மனிதர்களாக நின்று இறைவனின் எவல்- விலக்கல்கள்படி வாழ்ந்து காட்டுவது, அந்த அடிப்படையில் வாழக்கூடிய மக்களை ஒருங்கிணைத்து சமூகத்தில் புரையோடிப் போயுள்ள தீமைகளையும் மூடநம்பிக்கைகளையும் சுரண்டல்களையும் களைவது, மனித உரிமைகளை மீறல்களைத் தடுத்து அவற்றை மீட்டெடுப்பது, சமூகத்தில் அனைத்து தரப்பு மக்களுக்கும் இடையில் சமத்துவத்தையும் சகோதரத்துவத்தையும் நல்லிணக்கத்தையும் ஏற்படுத்துவது போன்றவை இறைத்தூதர்களின் பொறுப்புகளில் அடங்கும்.



இறைவனின் இறுதித்தூதர் முஹம்மது நபி(ஸல்) அவர்கள் மக்காவில் இருந்து மதீனாவுக்கு புலம்பெயர்ந்து ஆறு ஆண்டுகள் நிறைவடைந்திருந்த வேளை மதீனாவின் ஆட்சிப் பொறுப்பில் இருந்தார்கள். இறைவனின் தூதர் என்ற முறையில் தனது பொறுப்பை நிறைவேற்றும் பொருட்டு நபிகளார் அரேபிய எல்லையைத் தாண்டியிருந்த மன்னர்களுக்கு இஸ்லாத்தை ஏற்றுக் கொள்ள அழைப்பு விடுத்துக் கடிதங்கள் அனுப்பினார்கள்.

அதைப்போல் அரேபியாவில் இருந்த சில கோத்திரத்தின் தலைவர்களுக்கும் மடல் அனுப்பி வைக்கப்பட்டது. நஜ்து பகுதியிலுள்ள யமாமாவின் கோத்திரத்தைச் சேர்ந்த பனூ ஹனீ.்.பாவிற்கும் ஒரு மடல் சென்று சேர்ந்தது. அங்கு துமாமா இப்னு உதால் பனூ ஹனீ.்.பாவின் முக்கியத் தலைவர்களுள் ஒருவர்.

'மக்காவில் நபி ஒருவர் தோன்றியிருக்கிறாராம் இன்னின்ன மாதிரியெல்லாம் சொல்கிறாராம் குரைஷிகளுக்கும் அவருக்கும் இடையே போராம் சண்டையாம் மதீனாவிற்குச் சென்று விட்டாராம்' என்றெல்லாம் செய்திகள் வந்து கொண்டுதான் இருந்தன. துமாமாவின் காதிலும் அவையெல்லாம் விழுந்து கொண்டிருந்தன. அதையெல்லாம் துமாமா ஒரு பொருட்டாக எடுத்துக்கொள்ளவில்லை.

## கதவைத் தட்டிய தூது

இவ்வாறிருக்கையில் நபியவர்கள் அனுப்பிய தூதுவர் ஒருவர் மெனக்கெட்டு மதீனாவிலிருந்து புறப்பட்டு வந்து தம் வீட்டுக் கதவைத் தட்டி, “இந்தாருங்கள் கடிதம்” என்று நீட்டியதும் அதில் ஏக இறைவனை ஏற்றுக் கொள்ளும்படி அழைப்பைப் படித்தார் துமாமா. பொத்துக் கொண்டு வந்தது ஆத்திரம். “போனால் போகிறது என்று இந்த முஹம்மதைக் கண்டுகொள்ளாமல் விட்டது தப்பு போலிருக்கிறதே. இறுதியில் இப்பொழுது எனக்கே அழைப்பா? அவரைக் கொன்றால்தான்

சரிப்படும்" என்று தம் எண்ணத்தை பகிரங்கமாய் அறிவித்துவிட்டார் துமாமா.

அத்துடன் நிற்கவில்லை. பின்னர் ஒரு சூழ்நிலையில் தற்செயலாக மாட்டிகொண்ட நபித் தோழர்கள் சிலரையும் கொன்றுவிட்டார். அந்தச் செய்தி மதீனா வந்தடைந்ததும் நபிகளார் பெரும் கோபம் கொண்டார்கள். தனக்காக யாரையும் ஒருபோதும் பழிவாங்கியதில்லை நபிகளார். ஆனால் தர்மத்தை நிலைநாட்டும் பணியில் ஏற்பட்ட தடங்கல் இது என்பதால் கொலைகளுக்குப் பழிவாங்கும் நடவடிக்கையாக துமாமாவைக் கொல்ல உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

இந்த உத்தரவை துமாமாவும் அறியாமல் இல்லை. இருப்பினும் அவரளவில் அவர் ஒரு வீரர். யாருக்கும் அஞ்சாதவர். முஹம்மதும் அவரின் தோழர்களும் தம்மை ஒன்றும் பெரிதாய்த் தாக்கிவிட முடியாது என்றும் அவர் மனதில் ஓர் அலட்சியம் இருந்தது.

இவ்வாறிருக்கையில் தம் மூதாதையர் வழக்கப்படி மக்காவில் கஅபா ஆலயத்திற்கு புனித யாத்திரை சென்று அங்குள்ள சிலைகளுக்கு வழிபாடு செய்து வர ஆயத்தமானார் துமாமா. தனியே கிளம்புவதில் அவருக்கு அச்சமிருக்கவில்லை. ஆனால் வழியில் நபித்தோழர்கள் சிலரால் சிறைபிடிக்கப்பட்டார் துமாமா. மதீனாவில் நபிகளாரின் பள்ளிவாசலுக்கு கொண்டுவரப்பட்டார். அங்குள்ள தூண் ஒன்றோடு இணைத்து விலங்கிடப்பட்டார்.

## மதீனா பள்ளிவாசலில் சிறப்பு உபசரிப்பு



"இவர்தான் துமாமா இப்னு உதால். கைது செய்தீர் நல்லது செய்தீர்" என்று தோழர்களிடம் கூறிவிட்டு வீட்டிற்குச் சென்றுவிட்டார்கள் நபியவர்கள். தம் குடும்பத்தாரிடம், சிறந்த உணவும் ஆகாரமும் சமைக்கச் சொல்லி, அதையும் தம் பிரத்யேக ஒட்டகத்திலிருந்து கறக்கப்பட்ட பாலையும் அனுப்பி, "இதோ இதை துமாமாவிற்கு அளியுங்கள்" என்று தோழர்களிடம் கூறினார் நபிகளார்.

"என்ன? கொலைத் தண்டனை கைதிக்குச் சிறப்பு உபசரிப்பா?" என்று தோழர்களுக்கு ஆச்சரியம். "சரிதான்! வயிற்றுக்கு உணவு ஈந்து பிறகு தலையெடுப்பதுதான் இந்த ஊரில் வழக்கம் போலும்" என்று துமாமாவிற்குப் பேராச்சரியம். உணவை உண்டு முடித்ததும் மீண்டும் தூணோடு பிணைக்கப்பட்டார் துமாமா. பிறகு நபியவர்கள் வீட்டிலிருந்து பள்ளிவாசலுக்கு வந்தவர்கள் துமாமாவிடம் பேசினார்கள்.

"உன்னைப் பற்றி நீ என்ன சொல்ல விரும்புகிறாய் துமாமா?"

'பொறியில் சிக்கிய எலியாய் இருக்கிறோம். தலை போகப்போவது உறுதி. என்ன சொல்ல?' என்று யோசித்த துமாமா மனதிலுள்ளதை உரைத்தார். "நான் முன்னர் புரிந்த கொலைகளுக்குப் பகரமாய் என்னைக் கொலை புரிய வேண்டுமென்றால் இதோ உங்கள் எதிரே ஓர் உயர்குல இரத்தம். அல்லது கொலைகளுக்கு நட்ட ஈடாகப் பணமோ, பொருளோ வேண்டுமெனில், என்ன வேண்டும் என்று சொல்லுங்கள் இவை

இரண்டுமன்றி, தங்களுடைய பெருந்தன்மை குணத்தால் என்னை மன்னித்து விட்டுவிட நினைத்தால் நன்றிமறவாதவனாக என்னைக் காண்பீர்கள்”

நபியவர்கள் பதிலேதும் சொல்லாமல் சென்று விட்டார்கள். அடுத்த இரண்டு நாட்கள் அப்படியே தொடர்ந்தன. ஆனால் வேளாவேளைக்கு உணவு, பால் என்று உபசரிப்பு மட்டும் சிறப்பு விருந்தினருக்கான உபசரிப்புபோல் தொடர்ந்து கொண்டிருந்தது. பள்ளிவாசலுக்குள் கைகள் கட்டப்பட்ட நிலையிலே அவர் அந்த மக்களை பார்க்கின்றார். நபிகளாரின் உபதேசங்களையும் அவ்வப்போது கேட்கிறார். இஸ்லாம் ஏற்படுத்திய மாற்றங்களைக் கண்டு ஆச்சரியப்படுகிறார்!

- நான் காண்பது கனவா அல்லது நனவா!
- குடும்பப்பகை என்று காரணம் சொல்லி ஒருவரையொருவர் வெட்டி வீழ்த்திக் கொண்டிருந்தவர்களா இப்படி பாசப்பிணைப்பில் இருக்கின்றார்கள்?
- பெண்களை வரம்பின்றி பலாத்காரம் செய்தவர்களா இன்று அவர்களை கண்ணியப்படுத்துகிறார்கள்?
- பலவீனர்களை புரட்டி எடுத்தவர்களா இன்று அவர்களோடு ஒன்றிப்போய் இருக்கிறார்கள்? தோளோடு தோள் சேர்த்து நின்று தொழுகிறார்கள்?
- கறுப்பு நிறத்தவரை காலில் போட்டு மிதித்தவர்களா அவர்களுடன் கைகோர்க்கிறார்கள்?

மூன்று நாட்கள் தூணில் கட்டப்பட்டிருந்தவாறே முஸ்லிம்களின் நடவடிக்கை ஒவ்வொன்றையும் பார்வையிடுகிறார்.

இருநாட்களுக்குப் பிறகு துமாமாவை நெருங்கிய நபியவர்கள் கேட்டார்கள், “உன்னைப் பற்றி நீ சொல்ல விரும்புவது என்ன துமாமா?” அதே கேள்வி. துமாமாவிடமிருந்தும் அதே பதில் வந்தது.

அதற்குப் பிறகும் துமாமாவிற்கு அதே உபசரிப்பு நீடித்தது. அதற்கு அடுத்த நாள் மீண்டும் துமாமாவிடம் வந்தார்கள் நபியவர்கள். மீண்டும் அதே கேள்வியைக் கேட்க, அசராமல் அலுங்காமல் துமாமாவும் அதே பதிலைக் கூறினார்.

அதற்குமேல் அவரிடம் எதுவும் பேசாமல் தம் தோழர்களிடம் திரும்பிய நபிகளார், “இவரை விடுவியுங்கள்” என்று உத்தரவிட்டுத் தன் இல்லம் திரும்பிவிட்டார்கள். தோழர்களுக்கு ஒன்றும் புரியவில்லை. ஆனால் நபிகளாரின் கட்டளைப்படியே கட்டவிழ்த்து விட்டார்கள் துமாமாவை!

துமாமாவிற்கோ குழப்பம். ‘என்ன எனக்கு விடுதலையா? என் தலை எனக்கே சொந்தமா? பணம், பொருள் என்று எந்தப் பிணைத் தொகையும் தேவையில்லையா? நான் காண்பதென்ன கனவா அல்லது நனவா?’



கைகள் விடுவிக்கப்பட, “நீ போகலாம்” என்று அறிவித்துவிட்டுத் தோழர்கள் நடையைக் கட்டிவிட்டார்கள். வெளியே வந்தார் துமாமா.

தனது ஒட்டகத்தில் ஏறிக்கொண்டார். நபியவர்களின் பள்ளிவாசலுக்குச் சற்று தொலைவில் அல்-ப.்.கீ எனும் அடக்கத்தலத்தின் அருகே பேரீச்சைத் தோட்டம் ஒன்று இருந்தது. அங்கு வந்தவர் இறங்கிக் கொண்டார். அத்தோட்டத்தில் அமைந்திருந்த நீரோடையில் ஒட்டகத்தைக் கழுவி நீரருந்த வைத்தார். தன்னைக் கழுவி சுத்தம் செய்து கொண்டார். அமர்ந்து நிதானமாய் யோசித்தார்.



புரியவில்லை.. நடந்தது எதுவுமே அவருக்குப் புரியவில்லை. கைதுசெய்து அழைத்துச் சென்றார்கள்.. மூன்று நாட்கள் ராஜ உபசாரம் புரிந்தார்கள் .. என்ன சொல்கிறாய்? என்று கேட்டார்கள். மனதில் பட்டதைச் சொன்னோம். நாம் செய்த கொலைகளுக்கும் அவர்களுக்கு நான் விளைவித்தக் கொடூரத்திற்கும் பழிவாங்கிக் கொள்ள அத்தனை சாத்தியமும் அவர்களுக்கு இருந்தது. ஆனால் என்னை விடுவித்துவிட்டார்களே...

**மனமாற்றமே இஸ்லாம்**

பள்ளிவாசலில் மூன்று நாட்களும் நடைபெற்ற காட்சிகள் கண்முன் மீண்டும் ஓடி மறைந்தன. தெளிவொன்று பிறந்தது துமாமாவிற்கு. இப்பொழுது அனைத்தும் புரிந்தது. பயணிக்க வேண்டிய திசை புரிந்தது. ஒட்டகத்தில் ஏறிக் கிளம்பினார், மீண்டும் மதீனா பள்ளிவாசலை நோக்கி... இஸ்லாத்தை ஏற்பதற்காக!

அங்கு அமர்ந்திருந்த நபியவர்களை நோக்கி நடந்த துமாமா, அவரைச் சூழ்ந்து அமர்ந்திருந்த தோழர்களைக் கடந்து நேராய் அவர்களை நெருங்கி சாட்சியுரைத்தார். “வணக்கத்திற்குரியவன் அல்லாஹ் ஒருவனே! முஹம்மது அவனது தூதர் என்று சாட்சி பகர்கிறேன்”

இதரத் தோழர்கள் அந்தக் காட்சியை ஆச்சரியமாகப் பார்த்துக் கொண்டிருக்க இஸ்லாத்தினுள் புகுந்தார் துமாமா இப்னு உதால் (அவர்மீது இறைவனின் திருப்தி உண்டாவதாக)

தொடர்ந்து உள்ளம் திறந்து உரைத்தார் துமாமா...

- “இறைவன் மீது ஆணையாக! இதுநாள்வரை உலகிலேயே எனக்கு மிகவும் வெறுப்பளிக்கக் கூடிய முகமாக உங்களது முகமே இருந்தது. ஆனால் இன்றுமுதல் உலகிலேயே எனக்கு மிகவும் உவப்பான முகம் தங்களுடையதே.
- “மதங்கள் அனைத்திலும் தாங்கள் சொல்லி வந்த மதத்தையே மிகவும் இழிவானதாக நான் இதுநாள்வரை கருதியிருந்தேன். இன்றிலிருந்து இஸ்லாத்திற்காக எனது உயிரும் அர்ப்பணம்!”
- “மதீனா நகரைப்போல் வேறொரு நகரை நான் வெறுத்ததில்லை. இன்றோ அன்பிற்குரிய நபியும் அவரின் தோழர்களும் வசிக்கும் இந்த நகரே எனக்கு மிக விருப்பமான இடம்!”

அடுத்து தழுதழுத்தது துமாமாவின் குரல். "அஞ்ஞானத்தில் தங்கள் தோழர்களின் உயிரைப் பறித்துவிட்டேனே! இப்பொழுது அதை நான் எப்படி நிவர்த்திப்பது?"

அவரைச் சாந்தமாய்ப் பார்த்தார்கள் நபிகளார். "நீர் இஸ்லாத்தில் நுழைந்த அக்கணமே உம்முடைய முந்தையப் பாவங்கள் அனைத்தும் மன்னிக்கப்பட்டு விட்டன் அழிக்கப்பட்டு விட்டன துமாமா"

துமாமாவின் முகத்திலிருந்த சோகமெல்லாம் மறைந்து புத்துணர்வும் ஒளியும் படர்ந்தன. தம் நெஞ்சில் கைவைத்து உணர்ச்சிகரமாய் உரைத்தார் "அல்லாஹ்வின் மீது ஆணையாக! உருவ வழிபாட்டில் ஈடுபட்டிருப்பவர்களை ஏக இறைவனின்பால் அழைக்க இன்றிலிருந்து எனது உயிர், பொருள் அனைத்தும் அர்ப்பணம். மறுப்பவர்களையெல்லாம் கடுமையாக அணுகப் போகிறேன் - அது தங்களின் தோழர்களிடம் முன்னர் நான் நடந்து கொண்டதைவிட மோசமாக இருக்கும்"

சற்று நிதானப்பட்டவர் தொடர்ந்தார்.. "அல்லாஹ்வின் தூதரே! நான் மக்காவிற்கு புனித யாத்திரை செல்லும் வழியில்தான் கைது செய்யப்பட்டேன். இப்பொழுது நான் என்ன செய்வது?"

"உனது யாத்திரை தொடரட்டும் துமாமா. ஆனால் இனி உனது வழிபாடு அங்குள்ள சிலைகளுக்கு அல்ல. அவை ஏதொரு சக்தியும் அற்றவை என்பதை நீ உணர்ந்து விட்டாய். கஅபாவில் வழிபாடு எப்படி இருக்க வேண்டும் என்று நான் கற்றுத் தருகிறேன்" என்று உம்ரா செய்வதற்கான இஸ்லாமிய வழிமுறைகளை சொல்லி, விவரித்துக் காண்பித்தார்கள் நபியவர்கள். கவனமாய் அவற்றைக் கற்றுக்கொண்டு மக்காவிற்குக் கிளம்பினார் துமாமா இப்னு உதால் (ரலி) அவர்கள்.

● **(நபியே!) நன்மையும் தீமையும் சமமாகமாட்டா. மிகச் சிறந்த நன்மையைக் கொண்டு நீர் தீமையைத் தடுப்பீராக! அப்போது உம்முடன் கடும் பகைமை கொண்டிருந்தவர்கூட உற்ற நண்பராய் ஆகிவிடுவதைக் காண்பீர். (திருக்குர்ஆன் 41:34)**

# வாசகர் எண்ணம்

● ஜூன் மாதன் இதழில் ரமழான் தந்துள்ள வாழ்வியல் அளவுகோல்கள் பற்றிய அனைத்து விளக்க கட்டுரைகளும் சிறப்பு. வியத்தகு சாதனைகளை நிகழ்த்திய 17 அரபு முஸ்லிம் விஞ்ஞானிகள் பற்றிய கட்டுரை பிரமிக்க வைத்தது. திருக்குர்ஆன் நற்செய்தி மலர் கிடைக்காமல் போயிருந்தால் இந்த உண்மைகள் எல்லாம் தெரியாமலேயே என் வாழ்நாள் வீணாகி இருக்கும். மனித உயிரியளவுகள் எனும் படைப்பு அற்புதம் தெரியாத சிருஷ்டியின் மகத்துவத்தை எண்ணி வியக்க வைத்தது.

- **தஞ்சை** N.J. **கந்தமாறன், சென்னை**

● நான் ஹிந்து முதலியார் குடும்பத்தைச் சார்ந்தவன் ஆம்பூர் ' கம்பெனியில் வேலை செய்கிறேன். அங்கு உங்கள் மலர் வருகிறது. தவறாமல் படிக்கிறேன். மிகவும் நன்றாக உள்ளது. இதை எனக்கும் வீட்டில் பெற விருப்பம்.


- **எஸ். திருநாவுக்கரசு, அழிஞ்சிக் குப்பம், குடியாத்தம்**

**மனமாற்றமும் குணமாற்றமுமே இஸ்லாம்**

# புதுமனிதனாக மாவீரன் துமாமா!

வெளியூரிலிருந்து மக்காவிற்கு உணவுப் பொருட்களும் சரக்கும் வந்து சேரும் பாதையில் அமைந்திருந்தது யமாமா என்ற ஊர். அந்த ஊரின் புகழ்பெற்ற கோத்திரத்தின் தலைவர் துமாமா. இஸ்லாத்தின் மீது அவர் கொண்டிருந்த தீவிர வெறுப்பு நபித்தோழர்கள் சிலரைக் கொல்லும் அளவுக்கு கொண்டு சென்றது. நபிகளாரின் கட்டளைப்படி சிறைபிடிக்கப்பட்ட அவர் மதீனாவில் நபிகளாரின் பள்ளிவாசலில் பிணைத்துவைக்கப் படுகிறார். அங்கு அவர் காண நேர்ந்த இஸ்லாமியர்களின் நடவடிக்கைகளும் நபிகளாரின் உபசரிப்பும் அவரது மனதை மாற்றி இஸ்லாத்தில் இணைய வைக்கிறது. அவரது முந்தைய பாவங்கள் மன்னிக்கப்பட்ட நிலையில் இஸ்லாத்தில் தீவிர ஈடுபாட்டை மேற்கொள்கிறார் துமாமா.

இஸ்லாம் கற்பிக்கும் ஏக இறைவழிபாட்டின் அடிப்படையில் கஅபா ஆலய வழிபாடான உம்ராவை நிறைவேற்றும் பொருட்டு தன்னந்தனியனாக ஒட்டகத்தின் மீது அமர்ந்துகொண்டு மக்காவில் நுழைந்தார் துமாமா. எப்படிப்பட்ட மக்கா நகரம் அது? இஸ்லாத்தை எப்படியும் வளரவிடக்கூடாது என்று இஸ்லாத்தை ஏற்றுக்கொண்டவர்களை கடுமையாக சித்திரவதைகள் செய்த குறைஷிகளின் ஆதிக்க பூமி! சித்திரவதைகளுக்கு பயந்து புலம்பெயர்ந்த மக்களையும் கொன்றொழிக்கும் நோக்கோடு மதீனா வரை படையெடுத்து தாக்கவந்த குறைஷியர்கள் நிறைந்த பூமி! அதற்குள்தான் ஒட்டகவலம் வருகிறார் துமாமா!



மக்கத்து வீதிகளில் கம்பீரமாய் பெரும் இரைச்சலுடன் கேட்டது அவரது குரல்!

**லப்பைக், அல்லாஹும்ம லப்பைக், லப்பைக், லாஷரீக்க லக லப்பைக்**

**இன்னல் ஹம்த, வந்நிஃமத்த லக்கவல் முல்க், லாஷரீக்க லக்**

(வந்துவிட்டேன் என்னிறைவா! வந்துவிட்டேன். வந்துவிட்டேன் உனக்கு இணையில்லை எனக்கூறி வந்துவிட்டேன். எல்லாப் புகழுரையும் அனைத்து அருட்கொடையும் ஆட்சி அதிகாரமும் இணையிலா உனக்கே உரியன!)

நபியவர்கள் கற்றுத்தந்த வாக்கியங்களை துமாமா இரைந்து சொல்லிக் கொண்டு நடக்க, அதைக் கேட்டு அதிர்ந்து திரும்பிய குரைஷிகள் விரைந்துவந்து அவரைச் சூழ்ந்தனர். பெருங்கூட்டம் கூடிவிட்டது. “என்னதொரு தைரியம், ஆணவம்? யார் அது?” என்று நெருங்கி வந்தார்கள் அவர்கள். கைகளில் வாளும் ஆயுதங்களும் மக்காவின் வெயிலில் பளபளத்தன. அதையெல்லாம் சட்டையே செய்யாமல் துமாமா தம் முழக்கத்தைத் தொடர்ந்தார். குறைஷி இளைஞன் ஒருவன் அவரைத்

தாக்க விரைந்தான். ஆனால் உடனடியாக குரைஷியர்களின் மூத்தவர் ஒருவர்தான் விரைந்து வந்து அவனைத் தடுத்தார். அவருக்குத் துமாமாவை அடையாளம் தெரிந்தது. எந்த ஊரின், எந்த கோத்திரத்தின் தலைவர் அவர், அவரின் பின்புலம் என்ன என்பதெல்லாம் அந்தப் பெரியவருக்கு நன்றாகத் தெரியும்.

"முட்டாளே! நிறுத்து! இது யாரென்று தெரியவில்லையா? பனூ ஹனீ∴பாவின் துமாமா.. அவரது தாடியின் உரோமத்தில் ஒன்று உதிர்ந்தாலும் நமக்குத் தானியங்கள் காலி"

வெளியூரிலிருந்து மக்காவிற்கு உணவுப் பொருட்களும் சரக்கும் வந்து சேரும் பாதையில் அமைந்திருந்தது யமாமா. அந்த ஊரின் புகழ்பெற்ற கோத்திரத்தின் தலைவன் ஒருவனின்மேல் கைவைத்தால் எங்கு 'நெறி' கட்டும் என்பதை அந்தப் பெரியவர் நன்றாக உணர்ந்திருந்தார்.

எனவே சிலர், துமாமாவை அணுகி சமாதானம் பேசினார்கள். "இதோ பார் துமாமா, என்னாச்சு உமக்கு? எங்களது கண்களை எங்களாலேயே நம்ப முடியவில்லை. உம் பெருமையென்ன, கீர்த்தியென்ன, அந்தஸ்தென்ன? உம்முடைய மூதாதையர்களின் மதத்தை உதறிவிட்டு நீர் இப்படி வழிகெட்டுப் போவீர் என்பதை நாங்கள் கனவிலும் நினைக்கவில்லையே?"

தலை உயர்த்திப் பெருமையுடன் அவர்களைத் திரும்பி பார்த்தார் துமாமா. "முஹம்மதுவும் அவர் அறிவித்துள்ள இஸ்லாமும் நேர்வழிக்கான சிறந்த மார்க்கம் என்பதை மனமார உணர்ந்துவிட்டேன்"

போதுமா? அனைவரையும் ஆழ்ந்து பார்த்தவர் தனக்குள்ள அனுகூலமான சூழ்நிலையைச் சரியாகப் பிரயோகித்தார். "உங்களையெல்லாம் எச்சரிக்கிறேன். நான் ஏக இறைவனை வழிபடுவதைத் தடுக்க உங்களில் யார் முனைந்தாலும் சரி, உங்கள் வீட்டுப் பாத்திரங்களெல்லாம் சமைப்பதற்கு தானியமின்றிக் கிடக்க வேண்டியதுதான். அல்லாஹ்வின் தூதரின் அனுமதி இல்லாமல் உங்களுக்கு ஒரு கைப்பிடி தானியமும் யமாமாவைத் தாண்டி வந்து சேராது"

ஆம், குரைஷிகளின் அடிவயிற்றில் கைவைத்தார் துமாமா. அதைக் கேட்ட குரைஷியர்களுக்கு வியர்த்தது! வேறுவழியில்லை அவர்களுக்கு.... "சென்று தொலை" என்பதுபோல் அவருக்கு வழிவிட்டவர்கள், தங்களது காதுகளை மட்டும் நன்றாகப் பொத்திக் கொண்டார்கள். முஹம்மது கற்றுத்தந்தார் என்று அந்த வாசகங்களையெல்லாம் அவர் தங்கள் ஊருக்குள்ளேயே வந்து தங்கள் மத்தியில் முழங்கிக் கொண்டிருப்பதைத் தடுக்கும் திராணி அவர்களுக்கு இருக்கவில்லை.

முஹம்மது நபி (ஸல்) அவர்கள் எங்ஙனம் கற்றுத் தந்தார்களோ அவ்விதம் தமது உம்ராவை (கஅபா ஆலயத்தில் வழிபாட்டை) நிறைவேற்றி முடித்தார் துமாமா. எந்த ஒரு குரைஷியும் அவரை நெருங்கவில்லை, தொந்தரவு அளிக்கவில்லை. தமது ஊருக்குத் திரும்பினார் துமாமா.

**தடை உத்தரவு**

ஆனால் வந்ததும் முதற்காரியமாக ஒன்று செய்தார். "உருவ வழிபாட்டில் ஈடுபட்டிருப்பவர்களை ஏக இறைவனின்பால் அழைக்க இன்றிலிருந்து எனது உயிர், பொருள் அனைத்தும் அர்ப்பணம். மறுப்பவர்களையெல்லாம் கடுமையாக அணுகப் போகிறேன் - அது தங்களின் தோழர்களிடம் முன்னர் நான் நடந்து கொண்டதைவிட மோசமாக இருக்கும்" என்று இஸ்லாத்தை ஏற்றபோது நபியவர்களிடம் கூறியிருந்தார். அதைச் செயல்படுத்த ஆரம்பித்தார்.

'மக்காவிற்குச் செல்லும் சரக்குகளுக்கு இன்றிலிருந்து தடை' என்று புதிய உத்தரவு உடனடி அமலுக்கு வந்தது. விளைவு?

மக்காவில் முதலில் உணவுப் பொருட்களின் விலை ஏறியது. பின்னர் உணவுப் பொருட்களின் தட்டுப்பாடு அதிகமானது. அதன் பின்னர் வயிறு பசிக்க ஆரம்பித்தது. தூரத்தில் யமாமாவில் அமர்ந்து கொண்டு குரைஷியர்களை ஆட்டிக் கொண்டிருந்தார் துமாமா.

இதை நீக்க என்ன வழி என்று யோசித்தார்கள் குரைஷியர்கள். ஒரே வழிதான் தென்பட்டது. அதற்குச் சற்று மான, ரோஷத்தை இழக்க வேண்டியது கட்டாயம். இருந்தாலும் பரவாயில்லை. அதுதான் ஒரே வழி....

ஆம், எந்த முஹம்மது நபியை 13 வருடங்களாக பகைத்துக்கொண்டு துன்புறுத்தினார்களோ அவர் மூலமாகவே இந்தத் தடையை தளர்த்த முயற்சிக்கத் துணிந்தார்கள். மதீனாவிற்குத் தகவல் அனுப்பினார்கள்.



**கருணை நபிகளின் பரிந்துரை**

'இந்த மாதிரி துமாமா என்பவர் எங்கள் அடிவயிற்றில் அடிக்கிறார். நீங்கள் ஒருவார்த்தை சொன்னால் போதும். எங்களுக்கு உணவு கிடைக்கும். பசிக் கொடுமை தாளவில்லை...' என்று செய்தி வந்து சேர்ந்தது நபியவர்களுக்கு. ஒரு காலத்தில் நபியவர்களையும் அவர் சுற்றத்தையும் தோழர்களையும் ஊர் விலக்கு செய்து, அபூதாலிபுக் கணவாய்க்குத் துரத்தி அடித்து, உணவு கிடைக்கவிடாமல் செய்து, அவர்களைப் பட்டினியில் வாட்டிப் பார்த்து மகிழ்ந்த குரைஷிச் சமூகம் இன்று அதே நபியவர்களிடம் தங்களது பட்டினிக்குப் பரிகாரம் தேடி ஓடியது.

தான் கொண்டுவந்த சத்தியத்தை ஏற்காதவர்கள் என்று கூறி நபிகளார் அவர்களின் கோரிக்கையை மறுக்கவில்லை. தாமதியாமல் துமாமாவுக்குக் கடிதம் ஒன்றை அனுப்பி வைத்தார்கள் நபிகளார்.

"என்னுடைய நபியவர்கள் சொல்கிறார்களே, அவர்களது வார்த்தையைத் தட்ட முடியாதே என்பதற்காகவே நான் இதற்கு உடன்படுகிறேன்" என்று தடையைத் தளர்த்தினார் துமாமா.

● **(இஸ்லாமிய) மார்க்கத்தில் (எவ்வகையான) நிர்ப்பந்தமுமில்லை வழிகேட்டிலிருந்து நேர்வழி முற்றிலும் (பிரிந்து) தெளிவாகிவிட்டது ஆகையால், எவர் வழி கெடுப்பவற்றை நிராகரித்து அல்லாஹ்வின் மீது நம்பிக்கை கொள்கிறாரோ அவர் அறுந்து விடாத கெட்டியான கயிற்றை நிச்சயமாகப் பற்றிக் கொண்டார் - அல்லாஹ்(யாவற்றையும்) செவியுறுவோனாகவும் நன்கறிவோனாகவும் இருக்கின்றான். (திருக்குர்ஆன் 2:256)**

**மனமாற்றமும் குணமாற்றமுமே இஸ்லாம்**

# போரின்போதும் வழுவாத மனிதநேயம்

தன் தாயகமான மக்காவில் நபிகள் நாயகம் மக்களை மூடநம்பிக்கைளைக் கைவிட்டுவிட்டு ஏக இறைவனை வணங்கச் சொல்லி அழைத்தார். ஆனால் சத்தியம் மக்களுக்குக் கசந்தது. தீவிரமாக எதிர்த்தார்கள். அவரையும் சத்தியத்தை ஏற்றுக் கொண்டோரையும் கடுமையான சித்திரவதைகளுக்கு உள்ளாக்கினார்கள் மக்கத்து குறைஷியர்கள். ஆனால் நபிகளார் பொறுமைக்கு மேல் பொறுமை மேற்கொண்டு சத்தியப் பிரச்சாரத்தை தொடர்ந்தார்கள்

மக்காவில் பதிமூன்று வருடம் தொடர்ந்த பயங்கரவாத அடக்குமுறைகளை அனுபவித்த பிறகு நபிகள் நாயகமும் தோழர்களும் சுமார் 500 கிலோமீட்டர் தொலைவிலுள்ள மதீனாவுக்குக் குடிபெயர்ந்தனர். அங்கும் அவர்களைத் தாக்க வந்தனர் மக்காவின் கொடுங்கோலர்கள். அந்த நிலையில் இறைவனின் அனுமதிக்குப் பிறகு தற்காப்புக்காக அவர்களோடு போர் புரியும் நிர்பந்தமும் ஏற்பட்டது முஸ்லிம்களுக்கு. அவ்வாறு நபிகளாரும் தோழர்களும் பல போர்களை எதிர்கொண்டார்கள். அந்தப் போர்களில் எல்லாம் நீதியையும் தர்மத்தையும் முழுமையாகக் கடைபிடித்தார்கள். கீழ்கண்ட நடவடிக்கைகளையும் நபிகளாரின் கட்டளைகளையும் உதாரணமாகக் கூறலாம்:

- அதர்மத்துக்கு எதிரான போரில் எக்காரணம் கொண்டும் பொதுமக்களும் பாமரர்களும் அப்பாவிகளும் பெண்களும் குழந்தைகளும் பாதிக்கப்படக் கூடாது. எதிரிகள் தாக்கவரும் போதும் அவர்கள் ஊருக்குள் வந்து மக்களைத் தாக்க விடாமல் ஊருக்கு வெளியிலேயே எதிர் கொள்கிறார்கள் நபிகளார்.
- போரில் எக்காரணம் கொண்டும் பெண்களும் குழந்தைகளும் கொல்லப் படக்கூடாது.
- நிராயுதபாணிகளைக் கொல்லக் கூடாது.
- சரணடைபவர்களை பாதுகாப்பான இடங்களுக்கு அனுப்பிவைக்க வேண்டும்.
- மரங்களை வெட்டக் கூடாது. பயிர்களை நாசம் செய்யக் கூடாது.
- வழிபாட்டு ஆலயங்களையும் ஆசிரமங்களையும் தாக்கக்கூடாது.
- இறந்துபோன சடலங்களை சிதைக்கக் கூடாது.
- இவைபோன்ற இன்னும் பல ஒழுங்குமுறைகள்......

தர்ம யுத்தத்தில் இவற்றையெல்லாம் இறைவிசுவாசிகள் பேணியே ஆகவேண்டும்.

அனைத்துக்கும் மேலாக எதிரிகள் செய்த கொடுமைகளுக்குப் பழிவாங்குவதல்ல, மாறாக அவர்களை சீர்திருத்துவதும் தர்மத்தை பூமியில் நிலைநாட்டுவதுமே நமது நோக்கம் என்பதை முஸ்லிம்கள் மனங்களில் அடிப்படையாக விதைத்தார்கள் நபிகளார்.

## இன்றைய வல்லரசுகளோடு ஒப்பீடு

இன்றைய காலகட்டத்துப் போர் நடைமுறைகளோடு பொருத்திப்

பார்க்கும்போதுதான் இக்கட்டளைகளின் அருமையை நாம் உணர முடியும்.

அமேரிக்கா வியட்நாமைத் தாக்கியபோது BLU -82B /C -130 என்ற உற்பத்திப்பெயரைக் கொண்ட, "Daisy Cutter" என்று செல்லமாக அழைக்கப்பட்ட நாசகார ஆயுதத்தை வியட்னாம் காடுகளில் போட்டார்கள். அந்த குண்டு வனாந்தரக் காட்டின் மத்தியில் 600 மீட்டர் சுற்றளவுக்கு மரங்களை அழித்து விடும். மரங்கள் அழிக்கப் பட்ட இடத்தில் ஒரு ஹெலிகாப்டர் இறங்கக்கூடிய அளவுக்கு இடம் கிடைத்துவிடுமாம். டெய்சி கட்டர் குண்டு வீச்சினால் பரவிய காட்டுத்தீயில் அங்கு வாழ்ந்த வியட்நாமிய மக்களும் மரணமடைந்தனர், சீறிப்பாய்ந்த தீச்சுவாலைகளால் மிரண்ட மக்களை எந்தப் பக்கம் ஓடுவது என்று தெரியாமல் தவிக்க வைத்தது. அதைப்பற்றி யாருக்குக் கவலை? ஹெலிக்காப்டர் தரையிறங்குமளவுக்கு இடம் கிடைத்ததல்லவா? அதுதானே ஆயுத வியாபாரத்திற்கு அவசியமான விளம்பரம்?

**போர்க்கைதிகள்**

அடுத்ததாக, போரில் பிடிபட்ட கைதிகளை என்ன செய்தார்கள் நபிகளார்? அங்கும் நமக்குப் படிப்பினை இருக்கிறது.

போர் செய்யும் போது பிடிபட்ட எதிரி நாட்டு வீரர்களை தண்டிப்பதுதான் மரபாகப் பேணப்பட்டது அக்காலத்தில். ஆனால் நபி (ஸல்) அவர்களோ பத்ரு போரின்போது பிடிபட்ட குறைஷிப் படையின் கைதிகளை தங்களின் எதிரிகளாகப் பாவிக்காது மதீனாநகர் சிறுவர்களுக்கு அக்குறைசிகள் கற்றிருந்த கல்வியிலிருந்து எதையேனும் பயிற்றுவிக்கச் செய்தார். அதற்குப்பின் அவர்கள் அனைவரையும் மன்னித்து விடுதலை செய்தார்கள்

ஆம், மக்கள் நமக்கு எதிரிகளல்ல - ஒவ்வொரு மனித உயிரும் விலை மதிப்பற்றது - அவர்கள் திருந்த வாய்ப்பளிக்க வேண்டும் - என்ற இடிணையற்ற தத்துவத்தையே உலகுக்குக் கற்பித்துவிட்டு சென்றார்கள் நபிகள் நாயகம் என்ற இறைவனின் அருட்கொடை!

# ஏழை எளியோர் நலன் காக்காத அரசுக்கு நாசமே!

நபி(ஸல்)அவர்கள் கூறினார்கள் :

- மனிதர்களின் விவகாரங்களுக்கு இறைவனால் நியமிக்கப்பட்டுள்ளவர், அவர்களில் தேவையுடையோர், மற்றும் ஏழை எளியோர் தேவையை நிறை வேற்றத் தடையாக இருந்தால், அவருடைய தேவையை நிறை வேற்ற விடாமல் இறைவன் தடுத்து விடுவான். - (அபூ தாவூது, அபூமர்யம் அல் அஸ்தீ (ரலி)
- ஒரு சமூகத்தின் பொறுப்பாளர், அல்லது தலைவர் தன்னைச் சந்திக்க வரும் தேவையுடையோர், ஏழை எளியோர் போன்றோருக்கு தனது வாசலை சாத்தி வைத்திருந்தால், அல்லாஹ் அவனது நெருக்கடி நேரத்தில் வானத்துக் கதவுகளை திறக்காமல் சாத்தி விடுவான். - (திர்மிதி, அஹ்மது).
- ஒரு சமூகத்தில் உள்ள வலியவர்களிடமிருந்து எளியவர்களுக்கான உரிமைகள் பெற்றுத் தரப்படவில்லையானால் அந்தச் சமூகம் எப்படி தூய சமூகமாக முடியும்? - (இப்னு ஹிப்பான், ஜாபிர் (ரலி)

**மனமாற்றமும் குணமாற்றமுமே இஸ்லாம்**

# வெற்றியின்போதும் வழுவாத மனிதநேயம்

பொதுவாக எதிரி நாட்டின்மீது போர்செய்து வெற்றி காண்பவர்களின் நடைமுறையை நாம் அறிவோம்.

- எதிரி நாட்டு நீர் நிலைகளை யானையை விட்டுக் கலக்கி -
- விளைநிலங்களுக்குத் தீ வைத்து -
- தோற்றவன் பற்களைப் பிடுங்கி கோட்டைக் கதவில் பதித்து -
- தோற்றவனின் மூக்கை அறுத்துக் கோரப்படுத்தி -
- தோல்வி கண்டவனின் மனைவியின் கூந்தலை வெட்டி அவமதித்து -
- போரில் பங்கு கொண்டவன், பங்கு கொள்ளாதவன் என்ற பாகுபாடின்றி அனைவரையும் வெட்டிக் குவித்து -
- இன்னபிற அக்கிரமங்கள் எல்லாம் நிறைவேற்றிப் பழிதீர்த்துக் கொள்ளும் நடைமுறைகளை அன்றும் இன்றும் கண்டு வருகிறோம்.

## நபிகளார் நடத்திய தர்ம யுத்தம்

நபிகள் நாயகமும் தோழர்களும் மக்காவில் பதிமூன்று வருடம் நீடித்து நின்ற தொடர் சித்திரவதைகளுக்குப் பிறகு மதீனாவில் தஞ்சம் புகுந்தார்கள். அங்கும் கூட வந்து இஸ்லாத்தை அழிக்கவேண்டும் என்று கொடூர எண்ணத்தோடு வந்த குறைஷியர்களோடு தொடர்ந்து பல போர்கள் நடந்தன. வெற்றியும் தோல்வியும் மாறி மாறி வந்தன. அதேவேளையில் மனித மனங்கள் இஸ்லாத்தின் பால் ஈர்க்கப்பட இஸ்லாம் அசுர வேகத்தில் வளர்ந்தது. இறுதி வெற்றி தர்மத்திற்கே கிடைத்தது. இறுதியில் நபிகள் நாயகமும் தோழர்களும் திரளாக மீண்டும் தாயகமான மக்காவுக்கே திரும்பும் அளவுக்கு பலம் பெற்றார்கள்.

சுமார் பத்தாயிரம் தோழர்களுடன் முன்னறிவிப்பு ஏதும் இன்றி மக்காவுக்குள் நுழைந்தார்கள் நபிகளார். அவர்களை ஊரை விட்டே விரட்டியவர்களும், அவர்களின் குடும்பத்தினரையும் தோழர்கள் பலரையும் படுகொலை செய்தவர்களும் சித்திரவதை செய்தவர்களும் அவர்களின் சொத்துக்களை சூறையாடியவர்களும் என அனைவரும் தங்களின் கதி என்னவாகுமோ என்று பீதியடைந்தார்கள்.

## மன்னிப்பின் சிகரம்

சக்தி மிக்க ஆட்சியாளராகவும் தனது கட்டளைக்கு காத்திருக்கும் தோழர்களைக் கொண்ட வலிமையான சமுதாயத்தின் தலைவராகவும் மக்காவில் பிரவேசித்த நபிகள் நாயகம்(ஸல்) அவர்களின் உள்ளத்தில் பழிவாங்கும் உணர்வு அறவே இருக்கவில்லை! கத்தியை எடுக்கவில்லை. இரத்தமும் சிந்தச் செய்யவில்லை. பயந்து நடுங்கி வீட்டிற்குள் அடைபட்டுக் கிடந்த மக்கத்துக் குறைஷியரை அன்பொழுக அழைத்தார்கள் நபிகள் நாயகம் (ஸல்) : “குறைஷிகளே! உங்கள் மீது இன்றைய தினம் எந்தக் குற்றமுமில்லை. நீங்கள் அனைவரும் மன்னிப்பை பெற்று உரிய பாதுகாப்பைப் பெறுகிறீர்கள்” என்று பறைசாற்றினார்கள் மன்னிப்பின் சிகரம் நபிகள் நாயகம்.(அவர் மீது இறைவனின் சாந்தியும் சமாதானமும் நிலவட்டுமாக!)

உலக வரலாற்றில் சக்தி மிக்க ஒரு தலைவர் ஒரு உயிரைக் கூடப் பறிக்காது. ஒரு நாட்டை வெற்றி கொண்டது இது ஒன்றாகத்தான் இருக்க முடியும்.

ஆனால் இங்கு நபிகளார் நடத்தியது போரல்ல, தர்மத்தை நிலைநாட்டுவதற்கான முயற்சி!

ஆம், இங்கு உயர்ந்த ஒரு இலக்கை அடைவதற்காக சாமானிய மனிதர்களுக்கு இயல்பாகவே ஏற்படும் பழிவாங்கும் உணர்வுகளை எல்லாம் அடக்கியாண்டு முழு உலகுக்கும் முன்னுதாரணமாகத் திகழ்கிறார்கள் நபிகளார்! அதாவது பூமியில் அதர்மத்தை அழித்து தர்மத்தை நிலைநாட்ட வேண்டும், மக்கள் படைத்தவனுக்குக் கட்டுப்பட்டவர்களாக சாந்தியோடும் சகோதர உணர்வோடும் இன்ப துன்பங்களை பரஸ்பரம் பகிர்ந்து கொண்டும் வாழக்கூடிய ஒரு சூழ்நிலையை உலகெங்கும் உருவாக்க வேண்டும் என்ற மிக உயர்ந்த தனது இலக்கை அடைவதற்காக பொறுமையையும் மன்னிப்பையும் ஆயுதமாகக் கொள்கிறார்கள் நபிகளார். அநீதியை ஒழித்து நீதியையும் பகைமையை ஒழித்து நட்பையும் கலவாரங்களை ஒழித்து அமைதியையும் நிலைநாட்டத்தான் கருணையுள்ள இறைவன் தன்னை தூதராக அனுப்பியுள்ளான் என்பதை உணர்ந்து கடமை உணர்வோடு நடந்துகொண்டார்கள் நபிகளார்.

● **எனினும் (நபியே) மன்னிப்பைக் கைக் கொள்வீராக! நன்மையைக் கடைபிடிக்குமாறு (மக்களை) ஏவுவீராக மேலும் அறிவீனர்களைப் புறக்கணித்து விடும். (திருக்குர்ஆன் 7:199)**

'நன்மையைக் கொண்டே தீமையைத் தடு' என்ற இறைக் கட்டளையை அட்சரம் பிசகாமல் பின்பற்றினார்கள். இந்த அணுகுமுறை கல்நெஞ்சங்களையும் கரைத்தது. மக்கள் மனமுவந்து இஸ்லாத்தில் தங்களை இணைத்துக் கொண்டனர். மக்கா வெற்றிகொள்ளப்பட்டதைத் தொடர்ந்து சூழ இருந்த ஒவ்வொரு அரபு குலத்தாரும் கூட்டம் கூட்டமாக வந்து இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டனர்.

**திருக்குர்ஆன் தமிழாக்கம் அன்பளிப்புப் பிரதி பெற விரும்பும் மாற்றுமத அன்பர்கள் கீழ்கண்ட எண்களில் தொடர்பு கொள்ளவும்:**

சென்னை: 9941227866, 9894442844, 8122264467(மயிலாப்பூர்), 9840572018 (நுங்கம்பாக்கம்), 9840527687 (பல்லாவரம்), 9087836393(தாம்பரம்), ஓசூர்: 9994713191 கிருஷ்ணகிரி: 9952862321 தர்மபுரி: 9842627171 கோவை: 9600800050 திருப்பூர்: 9150068919 குன்னூர்: 9843622246 ஊட்டி: 9843927014 ஈரோடு: 7373947869, 9942958888 உடுமலை: 9865051917 பழனி : 9894278528 பொள்ளாச்சி: 9843657426 சேலம்: 9994091364 திருச்சி: 9865446344, 9442709087 மதுரை: 9789341714 கும்பகோணம்: 9597285160 விழுப்புரம்: 9790290002 திருநெல்வேலி: 9786230030 தென்காசி :9443695979 வேலூர்: 9944656942 திருவண்ணாமலை: 9994564650, 9944905212 தூத்துக்குடி: 8148059038 இளையான்குடி: 9842081210 ராஜபாளையம்:7845033616 ராமநாதபுரம்:7418140634 பாம்பன்: 9043758656 கே.ஜி.எ.ஃ.ப்: 9845217262

Printed, published &edited by A.Mohamed Kasim on behalf of House of Peace, No.501, 3rd cross, Syed Block, AS palya, Bangalore 560017 and printed at Print-O- Graph, Balaji complex, Sultanpet, Bangalore.
Registered News paper in India No. KARTAM/2007/28173

# வீடுவரை ரகு (தொடர்ச்சி)

ரயில்நிலையத்தில் இருந்து வீடுவரை ஓலா டாக்சியில் பயணித்துக்கொண்டிருந்தேன். சிக்னல்கள், நிறுத்தங்கள், ஹம்ப்கள் இவற்றைக் கடந்து சென்னை வீதிகளில் சென்று கொண்டிருந்தது டாக்சி. ஓட்டுனர் ரகுவரனோடு என் உரையாடல் தொடர்ந்தது....

“படைத்தவனை வணங்கறதுக்கு நமக்கு எந்த ஒரு புரோக்கருடைய தேவையும் இல்லை. நேரடியாவே வணங்கலாம். எந்த செலவும் இல்லாம வழிபாடு செய்யலாம். நமக்கு வேண்டியதை நேரடியாகவே நம்மைப் படத்தவன்கிட்ட கேட்டு பிரார்த்திக்கலாம். இப்படி அவன வணங்கும் முறையைத்தான் கடவுளே நமக்கு கற்றுக் குடுத்தான்.” என்றேன் நான்.

“என்ன பாய் சொல்றீங்க? கடவுளே கத்துக் கொடுத்தானா? எப்படி?”

“ஆமா ரகு, மனிதனை படைச்சு பூமியில வாழவிட்ட கடவுள் ஆரம்பம் முதலே அவனோட வாழ்க்கையின் நோக்கம் என்ன, பிறப்பு இறப்பெல்லாம் எதுக்காக, இந்த பூமில எப்படி வாழனும், நல்லது எது, கெட்டது எது, புண்ணியம் எது, பாவம் எது, மரணத்திற்குப் பின்னாடி என்ன நடக்கும், இறுதித் தீர்ப்பு நாள், சொர்க்கம், நரகம் இதப் பத்தியெல்லாம் கற்றுக்கொடுத்தே வந்துள்ளான். ஒவ்வொரு காலகட்டத்திலும் இந்த பூமியோட எல்லா பாகங்களுக்கும் அவனோட தூதர்கள் வந்திருக்காங்க... அவங்க மூலமா வேதங்களும் வந்திருக்கு”

“நீங்க சொல்றதப் பார்த்தா எல்லா மதங்களுக்கும் இடைல சம்பந்தம் இருக்குன்னு தோணுது பாய்”

“கண்டிப்பா ரகு, இந்த ஒட்டுமொத்த உலகத்தையும் நம்மையுமெல்லாம் படச்சவன் ஒரே ஒருத்தன்தானே, மனித குலம் அப்படீங்கறதும் ஒண்ணு எனும்போது அவன் நமக்கு காட்டித்தரக்கூடிய வாழ்க்கை நெறியும் ஒண்ணாகத்தானே இருக்க முடியும்? அதத்தான் நாங்க இஸ்லாம் அப்படீன்னு சொல்றோம்.”

“இஸ்லாம்னா அர்த்தம் என்ன பாய்?”

“இஸ்லாம்ங்கற அரபு வார்த்தைக்கு ஒரு அர்த்தம் அமைதி. இன்னொரு அர்த்தம் கீழ்படிதல். அதாவது இந்த உலகத்தைப் படைத்து பரிபாலிக்கும் இறைவனுடைய கட்டளைக்கு கீழ்படிந்து வாழ்றதுக்குப் பேருதான் இஸ்லாம். அப்படி வாழ்ந்தா இந்த பூமி வாழ்க்கைலேயும் அமைதி கிடைக்கும் மறுமைலேயும் அமைதி கிடைக்கும் - அதாவது சொர்க்கம் கிடைக்கும் அப்படிங்கறதுதான் இஸ்லாத்தோட தத்துவம்.”

“அப்போ இறைவனுடைய கட்டளைகள் என்னான்னு கத்துக் குடுக்கறதுக்குதான் இறைத் தூதர்கள் வந்தாங்கன்னு சொல்றீங்க பாய்.. அப்படித்தானே?”

“ஆமா ரகு, இறைவன் அந்தந்த காலத்திலே வாழ்ற நல்ல மனிதர்கள தேர்ந்தெடுத்து அவங்கள தன்னுடைய தூதர்களா நியமிக்கிறான். அவங்களுக்கு தன்னுடைய செய்திகள வானவர்கள் மூலமா சொல்லி அனுப்பறான். இந்த இறைத்தூதர்கள் அவங்க வாழ்ற சமுதாய மக்களுக்கு அந்த இறைச்செய்திய போதிப்பாங்க... அது மாத்ரமில்ல அவங்களே அந்த

இறைவழிகாட்டுதல்படி ஒரு முன்மாதிரியா நின்னு மக்களுக்கு வாழ்ந்தும் காட்டுவாங்க. அப்படி இந்த பூமிக்கு வந்த இறைத்தூதர்கள்ள கடைசியா வந்தவர்தான் முஹம்மது நபி அவங்க. இவருக்கு முன் சுமார் 600 வர்'ம் முன்னாடி வந்து போன இறைத்தூதர்தான் இயேசு. அவருக்கும் முன்னாடி மோசே, டேவிட், ஆபிரகாம்னு பலரும் வந்திருக்காங்க... இந்தியாலே ரிஷிகள் முனிவர்கள்னு பலரும் வந்தத கேள்விப்பட்டிருப்பீங்க இல்லையா ரகு?"

"ஆமா பாய்.. அப்ப இவங்கெல்லாம் ஒரே விஷயத்ததான் போதிச்சு இருப்பாங்களோ?"

"ஆமா ரகு, இவங்கெல்லாம் போதித்தது மூணு முக்கியமான அடிப்படைகளை.... முதல் விஷயம் நம்ம மனிதகுலம்ங்கறது ஒண்ணே ஒண்ணு. அதாவது மனிதர்கள் எல்லோருமே... அவங்க ஆப்ரிக்காலே பொறந்திருந்தாலும் சரி, அமெரிக்காலே, ஆசியாலே, இந்தியாலே, தமிழ்நாட்லே இப்படி எங்க பொறந்திருந்தாலும் சரி, கருப்பானாலும் செவப்பானாலும் சரி, என்ன மொழி பேசுனாலும் சரி இவங்க எல்லாத்துக்குமே மூலம் ஒண்ணுதான் அப்படீங்கற சத்தியம்.... அதாவது எல்லோருமே ஆதி தாய் ஆதி தந்தைன்னு சொல்லுவாங்க இல்லையா அவங்களோட பரம்பரைகள்தான்..."

"ரொம்ப கரெக்ட் பாய்... ஒன்றே குலம் ஒருவனே தேவன் அப்படீன்னுதானே நாமளும் சொல்லக் கேட்டிருக்கோம்"

"ஆமா ரகு... அதேதான்... இரண்டாவது விஷயமும் அதுதான்... அதாவது நமக்கு இருப்பது ஒரே ஒரு கடவுள்தான்."

"ஆமா பாய் அதுவும் உண்மைதான்... எல்லாக் கடவுளும் ஒண்ணுதான் இல்லையா பாய்"

"இல்ல ரகு... இங்கெதான் கொஞ்சம் நிதானமா யோசிக்கணும் ரகு. எல்லாக் கடவுளும் அப்படீன்னு சொல்லும்போது பல கடவுள்கள் இருக்காங்கன்னு மக்கள் நினைக்கறாங்க.. எதையெல்லாம் மக்கள் கடவுள் கடவுள்னு சொல்றாங்களோ அவையெல்லாமே கடவுள்தான் அப்படீன்னும் நினைக்கிறாங்க. அதனாலே என்னாகுது பாருங்க ரகு... நான் ஆரம்பத்திலே சொன்ன மாதிரி உண்மையான கடவுளப்பத்தி மரியாதை மனசுல தோன்றதில்ல. அதனால பாவங்களும் ஜாஸ்தியாகுது. உண்மை என்னான்னா இந்த உலகத்தைப் படைத்தவன் எவனோ அவன் மட்டும்தான் கடவுள்... அவனைத்தவிர எதுவுமே கடவுள் கிடையாது அப்படீங்கறது தான் உண்மை. இல்லையா ரகு?"

"புரியுது பாய்.. ஒருவனே தேவன் அப்படீன்னா படைத்தவன் ஒருவன் மட்டும்தான் கடவுள்.. அவனைத்தவிர எதையும் கடவுள்னு சொல்லக்கூடாது அப்படித்தானே பாய்?"

"கண்டிப்பா ரகு, இதுதான் பூமியிலே தர்மத்த நிலைநாட்டனும்னா பேணவேண்டிய முக்கியமான அடிப்படை விஷயம்.. இதைத்தான் அடிக்கடி பள்ளிவாசல்ல இருந்து வர்ற பாங்கோசைல கேக்கறீங்க.. 'அஷ்ஹது அன் லாஇலாஹா இல்லல்லாஹ்' அப்படீன்னு... வணக்கத்திற்கு

உரிய இறைவன் அல்லாஹ்வைத் தவிர யாரும் இல்லை என்று நான் சாட்சி கூறுகிறேன் அப்படிங்கறதுதான் இதோட அர்த்தம் ரகு"

"எங்க வீட்டுக்குப் பக்கத்திலேயே பள்ளிவாசல் இருக்குது. டெய்லி கேப்பேன். ஆனா இப்பதான் இதோட அர்த்தம் புரியுது பாய். அல்லாஹ் அப்படீன்னா கடவுள்னு அர்த்தமா?"

"ஆமா ரகு. வணக்கத்திற்கு உரிய ஒரே கடவுள் அப்படீங்கறதுதான் இந்த அரபு வார்த்தையோட அர்த்தம். இந்த வார்த்தைக்கு ஆண்பால் பெண்பால் பன்மை இதெல்லாம் கிடையாது. அதனாலதான் உலகத்துல முஸ்லிம்கள் எல்லோரும் இந்த வார்த்தைய பயன்படுத்தறாங்க"

"சரி பாய், எல்லா தூதர்களும் ஒரே கடவுளைப் பத்திதான் சொல்லிருக்காங்க அப்படீன்னா எப்படி இவ்ளோ மதங்கள் வந்துச்சு?"

"சரியான சந்தேகம் ரகு. பூமிக்கு வந்த எல்லா உண்மையான இறைத்தூதர்களும் படைத்தவன மட்டும் வணங்குங்க படைப்பினங் களையோ எங்களையோ அல்லது வேறு எதையுமோ வணங்கீறாதீங்க அப்படீன்னுதான் மக்களுக்கு சொன்னாங்க. மக்களோடு மக்களா கடவுள் சொல்லிக்குடுத்த மாதிரி முன்மாதிரி வாழ்க்கையும் வாழ்ந்தாங்க. தர்மத்தை சமூகத்துல நிலைநாட்டினாங்க. ஆனா அவங்களோட இறப்புக்குப் பின்னாடி ஷைத்தான் மக்கள வழிகெடுத்து அந்த இறைத்தூதர்களையே வணங்க வெச்சுட்டான்."

"அதெப்படி பாய், புரில"

(தொடரும் இன்ஷாஅல்லாஹ்)

# இறை நினைவோடு உறங்கு!

என்னிடம் பின்வருமாறு இறைத்தூதர்(ஸல்) கூறினார்கள் என நபித்தோழர் பராவு இப்னு ஆஸிப்(ரலி) அறிவித்தார்:

"நீ உன்னுடைய படுக்கைக்குச் செல்லும்போது தொழுகைக்குச் செய்வது போல் உளூ (தொழுகைக்கு முன் செய்யப்படும் அங்கத்தூய்மை) செய்து கொள். பின்னர் உன்னுடைய வலக்கைப் பக்கமாகச் சாய்ந்து படுத்துக் கொள். பின்னர் "யா அல்லாஹ்! நான் என்னுடைய முகத்தை உன்னிடம் ஒப்படைத்தேன். என்னுடைய காரியங்களை உன்னிடம் விட்டுவிட்டேன். என்னுடைய முதுகை உன் பக்கம் சாய்த்து விட்டேன். உன்னிடத்தில் ஆதரவு வைத்தவனாகவும் உன்னைப் பயந்தவனாகவும் இதைச் செய்கிறேன். உன்னைவிட்டுத் தப்பிச் செல்லவும் உன்னைவிட்டு ஒதுங்கி விடவும் உன் பக்கமே தவிர வேறிடம் இல்லை. யா அல்லாஹ்! நீ இறக்கிய உன்னுடைய வேதத்தை நான் நம்பினேன். நீ அனுப்பிய உன்னுடைய நபியையும் நம்பினேன்" என்ற பிரார்த்தனையை நீ செய்து கொள். (இவ்வாறு நீ சொல்லிவிட்டு உறங்கினால்) அந்த இரவில் நீ இறந்துவிட்டால் நீ தூய்மையானவனாய் ஆகிவிடுகிறாய். இந்தப் பிரார்த்தனையை உன்னுடைய (இரவின்) கடைசிப் பேச்சாக ஆக்கிக் கொள்"

(நூல்: புகாரி)

மனமாற்றமும் குணமாற்றமுமே இஸ்லாம்

# கோபத்தை மென்று விழுங்குதல்

**● அவர்கள் (பயபக்தி கொண்ட நன்மக்கள்) செல்வ நிலைமையிலும், வறுமை நிலைமையிலும் தானம் செய்து கொண்டே இருப்பார்கள். கோபத்தை விழுங்கி விடுவார்கள். மனிதர்(களின் குற்றங்)களை மன்னித்து விடுவார்கள். அல்லாஹ் (இத்தகைய) அழகிய குணமுடையவர்களை நேசிக்கின்றான். (திருக்குர்ஆன் 3:134)**

## கோபம் தவிர்

● ஒரு முறை ஒரு மனிதர் வந்து நபி (ஸல்) அவர்களிடம், “எனக்கு உபதேசியுங்கள் என்று கேட்டார். கோபம் கொள்ளாதே என்று நபியவர்கள் பதில் சொன்னார்கள். அவர் மீண்டும், மீண்டும் பல முறை உபதேசியுங்கள் என்று கேட்டபோது அப்போதும் நபியவர்கள் கோபம் கொள்ளாதே என்றே பதில் சொன்னார்கள். (அபூஹுரைரா (ரலி) - புகாரி, திர்மிதீ, அஹ்மத்).

## பழிவாங்க பலம் இருந்தும்...

நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்:

● தனது கோபத்தை செயல்படுத்த சக்தியிருந்தும் யார் அதை மென்று விழுங்குகிறாரோ அவரை மறுமை நாளில் மக்கள் முன்னிலையில் அல்லாஹ் அழைத்து, அவர் விரும்புகின்ற ஹூருல் ஈன் என்னும் கன்னியரைத் தேர்வு செய்ய அவருக்கு உரிமை வழங்குவான் (முஅத் இப்னு அனஸ் அல்ஜுஹ்னீ (ரலி) - திர்மிதீ, இப்னுமாஜா, அபூதாவூத்).



● பலத்தால் வீழ்த்துபவன் வீரன் அல்ல. கோபத்தின் போது கட்டுப்படுத்திக் கொள்பவனே வீரன் (அபூஹுரைரா (ரலி) - புகாரி, முஸ்லிம்).

## ஆறுவது சினம் - ஆற்றுவதெப்படி?

நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்:

● ஒருவர் நின்று கொண்டிருக்கும் போது கோபம் வந்தால் உட்கார்ந்து விடவும், கோபம் போய்விட்டால் சரி, இல்லையென்றால் படுத்துவிடவும் என்று கூறியிருக்கிறார்கள். (அபூதர் (ரலி) - திர்மிதீ, அஹ்மத்).

● கோபம் ஷைத்தானால் ஏற்படுகிறது. ஷைத்தான் நெருப்பினால் படைக்கப்பட்டவன். நெருப்பு தண்ணீரால் அணைக்கப்படுகிறது. எனவே கோபம் கொள்பவர் உளூச் செய்து கொள்ளட்டும் (அத்தியா அஸ் ஸஅதீ (ரலி) - அபூதாவூத்).

(உளூ என்றால் தொழுகைக்கு முன் செய்யப்படும் அங்கத் தூய்மை)

● கோபம் வரும் போது ‘அவூது பில்லாஹி மினஷ் ஷைத்தானிர் ரஜீம்’ (விரட்டப்பட்ட ஷைத்தானை விட்டும் அல்லாஹ்விடம் நான் பாதுகாவல் தேடுகிறேன்) என்று கூறினால் கோபம் போயிவிடும்

## மென்மையே மேன்மை

● "நிச்சயமாக அல்லாஹ் மென்மையானவன். அனைத்து விஷயங்களிலும் மென்மையை விரும்புகிறான்" என நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள். (ஆயிஷா (ரலி) - புகாரி, முஸ்லிம்).

● "ஒரு கிராமவாசி பள்ளிவாசலில் சிறுநீர் கழித்துவிட்டார். உடனே மக்கள் அவரைப் பிடித்தனர். நபி(ஸல்) அவர்கள் "அவரைவிட்டு விடுங்கள் அவர் கழித்த சிறுநீரின் மீது ஒரு வாளித் தண்ணீரை ஊற்றுங்கள். நீங்கள் (எளிமையான மார்க்கத்தில்) நளினமாக எடுத்துச் சொல்பவர்களாக அனுப்பப்பட்டுள்ளீர்கள். கடினமாக எடுத்துச் சொல்லக் கூடியவர்களாக நீங்கள் அனுப்பப்படவில்லை" என்று கூறினார்கள்" என அபூஹுரைரா(ரலி) அறிவித்தார். (புஹாரி)

● "மென்மையை இழப்பவன் நன்மையை இழப்பான்" என்று நபி (ஸல்) அவர்கள் கூறியுள்ளார்கள். (ஜரீர் பின் அப்துல்லாஹ் (ரலி) - முஸ்லிம், அபூதாவூத், இப்னுமாஜா, அஹ்மத்).

## கெட்டவார்த்தை தவிர்

● கெட்டவார்த்தைகள் பேசுபவன் மீது அல்லாஹ் கோபம் கொள்கிறான் என்று நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள். (அப்துல்லாஹ் இப்னு அம்ர் (ரலி) - அஹ்மத், இப்னுஹிப்பான்)

● தன் நாவால் வெட்கம் கெட்ட விஷயங்களைப் பேசுபவனையும், கெட்டவார்த்தைகள் கூறுபவனையும் அல்லாஹ் மிகவும் வெறுக்கிறான் என்று நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள். (அபுதர்தா (ரலி) - திர்மிதீ).

● திட்டக்கூடியவனாகவோ, சாபமிடுபவனாகவோ, கெட்ட செயல்கள் செய்யகூடியவனாகவோ, கெட்டவார்த்தை பேசுபவனாகவோ ஒரு இறைவிசுவாசி இருக்கமாட்டான் என நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள். (இப்னு மஸ்வூத் (ரலி) திர்மிதீ, அஹ்மத், இப்னுஹிப்பான்).

## சாபம் திருப்பித் தாக்கும்

● நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்: மற்றவரை ஒருவர் சபிக்கும் போது அந்து சாபம் வானத்திற்கு செல்கிறது. அங்கே வானத்தின் கதவுகள் மூடியிருக்கின்றன. பின்பு அது உலகத்திற்கே திரும்புகிறது. உலகத்திலும் கதவுகள் மூடியிருக்கின்றன. பின்பு அது வலது புறமும், இடது புறமும் அலைந்து திரிகின்றது. அங்கும் வழி கிடைக்காததால், அது சொன்னவரிடமே வந்து சேருகிறது. (அபுதர்தா (ரலி) - அபூதாவூத்).

● "ஒருவர் மற்றவரை பாவி என்றோ, கா∴பிர் (சத்திய மறுப்பாளன்) என்றோ அழைத்தால், அவர் (உண்மையில்) அவ்வாறு (பாவியாக, கா∴பிராக) இல்லையாயின், அது சொன்னவரிடமே வந்து சேருகிறது" என்று நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள். (அபுதர் (ரலி) - புகாரி)

## கோபமும் பொறாமையும் உடன்பிறப்புக்கள்

● நபி (ஸல்) அவர்கள் சொன்னார்கள்: "உங்களுக்கு முன் வாழ்ந்த சமுதாயத்தினரைப் பிடித்த பொறாமை மற்றும் கோபம் ஆகிய வியாதிகள் உங்களையும் பீடித்துள்ளன. அவை (இரண்டும்) மழித்துவிடக்கூடியவை. முடியை மழிக்கும் என்று கூறமாட்டேன் எனினும் அவை மார்க்கத்தையே மழித்துவிடும்" என்று கூறினார்கள். (ஸுபைர் பின் அவ்வாம் (ரலி) - திர்மிதீ, அஹ்மத்)

**மனமாற்றமும் குணமாற்றமுமே இஸ்லாம்**

# அதிகாலைத் தொழுகையின் சிறப்புக்கள்

மனிதன் நல்லொழுக்கம் உள்ளவனாக மாறவேண்டுமானால் அவன் தன்னைப் படைத்தவனை உணர்ந்து அவனுக்கு நன்றிக்கடன் பட்டவனாக வாழவேண்டும். சதா அலைக்கழிக்கும் ஷைத்தானின் ஊசலாட்டத்தில் இருந்து தன்னைப் பாதுகாத்துக்கொள்ள வேண்டும். அதற்கான செயல்திட்டமாக இஸ்லாம் தினசரி ஐந்துவேளைத் தொழுகைகளைக் கடமையாக்கி உள்ளது. இதில் அதிகாலையில் - அதாவது சூரியன் உதிக்கும் முன் - தொழப்படும் தொழுகை முக்கியமான சிறப்புக்களைக் கொண்டுள்ளது.

## அருள்வளம் பெற்றுத்தரும்

● நபி (ஸல்) அவர்கள் இறைவனிடம் இவ்வாறு பிரார்த்தித்தார்கள்: "யா அல்லாஹ்! எனது சமூகத்திற்கு அதிகாலை நேரத்தில் அருள்வளத்தை நல்குவாயாக!" (அபூதாவூத்)

(அல்லாஹ் என்றால் வணக்கத்திற்குத் தகுதிவாய்ந்த ஒரே இறைவன் என்பது பொருள்)

● நபிகளாரின் மகள் ஃபாத்திமா (ரலி) அறிவிக்கின்றார்: அதிகாலை நேரத்தில் நான் படுக்கையில் புரண்டு படுத்துக் கொண்டிருந்தேன். அந்நேரம் அண்ணலார் (ஸல்) என்னருகே வந்து தங்களது பாதங்களால் என்னை உசுப்பிவிட்டு இவ்வாறு கூறினார்கள்:

"அருமை மகளே! எழு! அல்லாஹ்வின் வாழ்வாதாரங்கள் வழங்கப்படும் நேரத்திற்கு சாட்சியாளராக இரு. அலட்சியப் படுத்துபவராக மாறிவிடாதே. அதிகாலை நேரத்திற்கும் சூரிய உதயத்திற்கும் இடையே இறைவன் (ரிஸ்க் எனும்) வாழ்வாதாரத்தை வழங்குகிறான்." (பைஹகீ)

## இறைவனே மெச்சும் செயல்

● அதிகாலைத் தொழுகைக்குச் செல்லும் ஒருவரைப் பார்த்து இறைவன் வியக்கும் காட்சியை நபி (ஸல்) அவர்கள் இவ்வாறு விவரிக்கின்றார்கள்:

"படுக்கை, போர்வை,மனைவி, மக்களின் அரவணைப்பு அத்தனையையும் உதறிவிட்டு அதிகாலையில் எழும் மனிதனைப் பார்த்து இறைவன் வியப்படைகின்றனான். வானவர்களிடம் கேட்கின்றான்: "வானவர்களே! எனது இந்த அடியானைப் பாருங்கள்..! படுக்கை, போர்வை, மனைவி, மக்கள் அத்தனையையும் உதறி விட்டு அதிகாலையில் எழுந்துவிட்டான். எதற்காக..? என்ன வேண்டும் இந்த அடியானுக்கு..? எனது அருள்மீது ஆசை வைத்தா…? எனது தண்டனையைப் பயந்தா…?" பின்னர் வானவர்களிடம் அல்லாஹ்வே கூறுகின்றான்:"உங்களை சாட்சி வைத்துக் கூறுகின்றேன்: அவன் ஆசைப்பட்டதை நான் அவனுக்கு நிச்சயம் கொடுப்பேன். அவன் எதைப் பயப்படுகின்றானோ அதிலிருந்து நிச்சயம்அவனுக்கு நான் பாதுகாப்புக் கொடுப்பேன்." (அஹ்மத்)

## நபிகளாரின் வேதனை:

● உபை இப்னு கஅப் (ரலி)அறிவிக்கின்றார்: ஒரு நாள் அண்ணலார் (ஸல்) அவர்கள் ஸுபுஹ் (அதிகாலைத்) தொழுகை முடித்தபின் எங்களை நோக்கித் திரும்பியவாறு கேட்டார்கள்: “இன்ன மனிதர் தொழுகைக்கு வந்தாரா?” மக்கள், “இல்லை..” என்று கூறினர். மீண்டும், “இன்னவர் வந்தாரா..?” என்று கேட்க, மக்களும் “இல்லை” என்று கூற, பெருமானார் (ஸல்) அவர்கள் வேதனையுடன் இவ்வாறு கூறினார்கள்: “நயவஞ்சகர்களுக்கு இந்த இரு தொழுகைகளும் (அதிகாலைத் தொழுகை ஸுபுஹ், மற்றும் இரவுத் தொழுகை இஷா) கடினமானவையாக இருக்கும். இந்த இரு தொழுகைகளில் கிடைக்கும் நன்மைகளை இவர்கள் அறிந்து கொண்டால் பள்ளிவாசலுக்கு தவழ்ந்தேனும் இதற்காக வருவார்கள்.” (புகாரி, முஸ்லிம்)

**நல்லொழுக்கத்தின் அளவுகோல்**

● நபித்தோழர் இப்னு உமர் (ரலி) கூறுகின்றார்: “ஸுபுஹ் தொழுகைக்கும் இஷா தொழுகைக்கும் யார் வழக்கமாக வருவதில்லையோ அவர்களைக் குறித்து நாங்கள் மோசமாகவே எண்ணியிருந்தோம்” (அதாவது நயவஞ்சகர்கள் என்று).

**இறைவனின் பாதுகாப்பு வளையம்**

● “யார் ஸுபுஹ் தொழுகையைத் தொழுகின்றாரோ அவர் அல்லாஹ்வின் பாதுகாப்பில் இருக்கின்றார்.” (தபரானி)

# நல்லொழுக்கம் பேணுதலே இஸ்லாம்




**நல்லொழுக்கம் பேணாத ஒருவன் மற்றவர்களை இஸ்லாத்திற்கு மாறு என்பது நகைப்புக்குரிய ஒன்று!**

From
**House of Peace**
PO Box No. 1726
Bangalore 560 017

Registered news paper in India No. KARTAM/2007/28173
Registered under Postal Regn. No. KRNA/BGE/1057/2018-2020
Posted at BANGALORE PSO, Mysore Road , Bangalore 560026 on 25th or 26th or 27th of every month. No. of Pages: 24+4
Licenced to post without prepayment . License No. WPP-308
Date of Publication: 25th of every month

**(PRINTED MATTER)**

To

..........................................................................

..........................................................................

..........................................................................

..........................................................................

# பகுத்தறிவு பயன்படட்டும்!

ஒரு பழம்பெரும் நாத்திகவாதியை ஆத்திகராக மாற்றிய சிந்தனை இது..



மறைந்த பேராசிரியர் பெரியார்தாசன்

- கடவுள் இருக்கிறானா? இல்லையா?
- இருந்துவிட்டால்....? மரணத்துக்குப் பின் நம் நிலை என்ன...?
- நாம் பிரச்சாரம் செய்து வருவதுபோல் கடவுள் இல்லை என்றால், எந்த விபரீதமும் எனக்கு ஏற்படாது. நான் தப்பித்துக் கொள்வேன், என் பிரச்சாரத்தினால் திசை திருப்பப் பட்டவர்களும் தப்பித்துக் கொள்வார்கள்.
- ஆனால் கடவுள் இருந்துவிட்டால்... ஆத்திகர்கள் சொல்வதுபோல் மரணத்துக்குப் பின் விசாரணை உண்டாகும், தீர்ப்புநாள் உண்டாகும், சொர்க்கம், நரகம் எல்லாம் இருக்கும்,
- அவ்வாறு ஆகிவிட்டால்....! என் நிலை....?